www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மே 2007
ரூ. 5.00



## தேங்காய்த்திட்டு:

# அரசின் நிலப்பறி

# புதுவை மக்களின் போர்க்கோலம்

### லாலுவின் நிர்வாகத் 'திறமை':

# கொல்லைப்புற வழியில் தனியார்மயம் - கட்டணக் கொள்ளை

"நட்டத்தில் விழுந்து கிடந்த இரயில்வே துறையை இலாபமீட்டும் துறையாக மாற்றிச் சாதனை படைத்துள்ளார் லாலு'', ''தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாகப் பயணிகள் கட்டணத்தை உயர்த்தாமல் பட்ஜெட் போட்டுள்ளார் ஏழைப்பங்காளர் லாலு'' என்றெல்லாம் பார்ப்பன இந்தியா டுடே முதல் சமூகநீதி பேசும் பத்திரிகைகள் வரை இரயில்வே அமைச்சர் லாலு பிரசாத் யாதவைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகின்றன. இந்திய நிர்வாகவியல் நிறுவனத்தில் (ஐ.ஐ.எம்.) பயிலும் மாணவர்களிடம், இலாபமீட்டும் இரகசியத்தைப் பாடம் நடத்தும் அளவுக்கு அவரது பெருமையும், புகழும் பெருகியுள்ளதாக முதலாளித்துவ மூதறிஞர்கள் பாராட்டுகின்றனர்.

1980-களில் 7.6 சதவீதமாக இருந்த இரயில்வே துறையின் வளர்ச்சி விகிதம் 1990-களில் 6.56 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அடுத்த பத்தாண்டுகளில் குறிப்பிடும் அளவுக்கு வளர்ச்சி இல்லை. இந்நிலையில், இரயில்வே துறையை இலாபமீட்டும் துறையாக லாலுபிரசாத் யாதவ் மாற்றியுள்ளார் என்றால், அவர் கையில் அலாவுதீனின் அற்புத விளக்கு கிடைத்துள்ளதா, என்ன! அதுவும் பயணிகள் கட்டணத்தை உயர்த்தாமலேயே அவரால் எப்படி இந்த அதிசயத்தைச் செய்ய முடிந்தது?

1990-களில் இரயில்வே துறையின் பல முக்கியமான மீட்டர்கேஜ் பாதைகள், அகலப் பாதைகளாக மாற்றப்பட்டன; டீசல் என்ஜின் மூலம் இயக்கப்பட்ட தடங்கள் பெருமளவில் மின்சாரமயமாக்கப்பட்டன; பல தடங்களில் இருவழிப் பாதைகள் போடப்பட்டன; பெரும்பாலான ரயில் நிலையங்களின் ''சிக்னல்கள்'' தானியங்கியாக மாற்றப்பட்டன. இவ்வாறு மிகப் பெரிய இரயில்வே துறையின் அடிக்கட்டுமானங்களை நவீனமயப்படுத்த பல்லாயிரங் கோடிகள் செலவிடப்பட்டதால், அந்த பத்தாண்டுகளில் இரயில்வே துறையின் இலாப விகிதம் குறைந்து போனது.

இம்முதலீடுகள் எல்லாம் 2001-ஆம் ஆண்டுக்குப் பிறகு படிப்படியாக பலன் தரத் தொடங்கியுள்ளன. நாட்டின் இரயில்வே தடங்களில் 70 சதவீதமாக உள்ள அகலப்பாதைகள்தான், இப்போது 95 சதவீத சரக்குப் போக்குவரத்துக்கும், 89 சதவீத பயணிகள் போக்குவரத்துக்கும் பயன்படுகின்றன என்பதிலிருந்தே 1990-களில் போடப்பட்ட அகலப்பாதைகளின் பங்களிப்பு புலனாகிறது. கடந்த மூன்றாண்டுகளாக சாலைப் போக்குவரத்துடன் போட்டியிடும் அளவுக்கு சரக்குகளை ஏற்றிச் செல்வதில் இரயில்வே துறை வளர்ந்துள்ளது. அகலப் பாதைகள் அமைக்கப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளதன் விளைவாக, மூலதன அழுத்தம் கொண்ட இரயில்வே துறை இப்போது மெதுவாக வளர்ச்சியடைந்து பலன்தரத் தொடங்கியதும், இதையே லாலுவின் நிர்வாகத் திறன் என்று முதலாளித்துவவாதிகள் உச்சிமுகர்ந்து பாராட்டுகின்றனர்.

நவீனமயப்படுத்தலால் ஏற்பட்ட செலவுதான் குறைந்து பலன்தான் கிடைப்பது ஒருபுறமிருக்க, இலாபமீட்டும் துறையாக இரயில்வே துறையை மாற்றிய லாலுவின் 'திறமை'தான் என்ன? பேருந்துகளிலோ சந்தையிலோ ஒருவன் பிக்பாக்கெட் அடித்தால் அது தண்டனைக்குரிய குற்றம். அதையே அரசாங்கம் செய்தால் அது நிர்வாகத் திறமை என்பதுதான் லாலு கண்டுபிடித்துள்ள உத்தி.

சாதாரண தொடர் வண்டிகள் (பாசஞ்சர்) அனைத்தும் எவ்வித வசதிகளுமின்றி விரைவு வண்டிகள் (எக்ஸ்பிரஸ்) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, விரைவு வண்டிக்கான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. அதே போல விரைவு வண்டிகள் அதிவிரைவு வண்டிகள் (சூப்பர் ஃபாஸ்ட்) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு சட்டபூர்வமாகவே கட்டணக் கொள்ளை தொடர்கிறது.

புறப்படும் இடத்திலிருந்து அல்லாமல், அருகிலுள்ள ரயில் நிலையத்திலிருந்து முன்பதிவு செய்தால், அதற்குக் கூடுதல் கட்டணம்; முன்பதிவு செய்யப்படும் படுக்கையில், கீழ்தளப் படுக்கைக்குக் கூடுதல் கட்டணம் என்று அங்கேயும் வழிப்பறி; அவசர அவசியம் கருதி உடனடியாக படுக்கை வசதியுடன் பயணம் செய்வதற்காக சற்று கூடுதல் கட்டணமுறையுடன் இருந்த ''தட்கல்'' திட்டத்தை வரைமுறையின்றி விரிவுபடுத்தி பலமடங்குக் கூடுதல் கட்டணக் கொள்ளை; 90 நாட்களுக்கு முன்னரே இணையதளம் மூலம் எத்தனை பயணச் சீட்டுகளையும் வாங்கிக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், இணையதள வசதியில்லாதவர்கள் அவசரப் பயணத்திற்காக வேறுவழியின்றி ''தட்கல்'' திட்டத்துக்கு துரத்தப்பட்டு அங்கே கூடுதல் கட்டணத்தைக் கொட்டியழ வேண்டிய நிலை; முன்பதிவு செய்ததை ரத்து செய்தால் இழப்பீடு தொகை இருமடங்கு உயர்வு என பல வழிகளிலும் நூதனமான

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

**வணிக மேலாண்மைக் கல்வி பயிலும் அமெரிக்க மாணவர்களிடம் தனது இலாபமீட்டும் 'நிர்வாகத் திறனை' விளக்கி உரையாடும் லாலு.**



www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 22

**இதழ் 7**

மே 2007

**உள்நாடு**
**தனிஇதழ்: ரூ.5.00**
**ஆண்டுசந்தா: ரூ.60.00**

***வெளிநாடுகள்***
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

***படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்***

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


## அன்னிய மோகத்திற்கு தரப்படும் விலை!

அமெரிக்காவின் வெர்ஜீனியா பல்தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் நடந்த துப்பாக்கிச் சூட்டில் தமிழகப் பேராசிரியர் ஜி.வி.லோகநாதன் கொல்லப்பட்ட செய்தி கேட்டு இங்குள்ள அமெரிக்க அடிமைகளும் அமெரிக்க மோகிகளும் அப்படியே துடிதுடித்துப் போய்விட்டார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் ''நாசா''வின் விண்ஓடம் கொலம்பியா வெடித்துச் சிதறிய விபத்தில் இந்தியாவைச் சேர்ந்த கல்பனா சாவ்லா மாண்டபோது ஜான்சிராணியோடு அவரை ஒப்பிட்டுப் போற்றி நாட்டையே துக்கத்திலும் துயரத்திலும் மூழ்கடித்தனர். இவர்கள் ஏதோ தாய்நாட்டின் சுதந்திரத்தையும் இறையாண்மையையும் காப்பதற்கான போராட்டத்தில் தமது உயிரையே தியாகம் செய்தவர்களைப் போல இந்த நாட்டின் பிஞ்சு நெஞ்சங்களிலும் நஞ்சை விதைக்கின்றனர்.

கோவையில் பொறியியற் பட்டப்படிப்பும், கான்பூரில் மேற்படிப்பும் முடித்து ஆராய்ச்சிப் படிப்புக்காக அமெரிக்கா போய், கால் நூற்றாண்டுக்கும் மேலாக அங்கேயே பேராசிரியர் வேலை செய்து, குடும்பம் நடத்தி, செத்தால் அங்கேயே அடக்கம் செய்ய வேண்டும் என்று விரும்பியவர் லோகநாதன்; உலக மேல்நிலை மேலாதிக்கப் போர்வெறி நோக்கத்துக்காக விண்வெளி ஆராய்ச்சி நடத்தும் ''நாசா''வில் வேலைக்குச் சேர்ந்து விபத்தில் மாண்டு போனவர் கல்பனா சாவ்லா. இப்படி அந்நியச் சேவைக்குத் தங்களால் அனுப்பி வைக்கப்படுபவர்கள், ஏதாவது துப்பாக்கிச் சூடு, விபத்து என்று பலியாகிப் போவதால் மற்றவர்கள் சோர்ந்து போகக்கூடாது அல்லவா! அதனால்தான் அரசியல்-தொழில் த்ரகர்கள் ஒவ்வொரு நிகழ்வின்போதும் துக்கத்தில் வெடிக்கிறார்கள். அரேபியப் பாலைவனத்தில் செத்து பிணமாகி சவப்பெட்டியிலேயே அழுகி நாறும் தமிழகத் தொழிலாளிகளை தாயகம் கொண்டு வரவும், சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் கசையடி சித்திரவதைப்பட்டு சிறைகளில் துடிக்கும் தமிழகத் தொழிலாளிகளை மீட்பதற்கும் துப்பில்லை; தமிழக மீனவர்கள் கடலிலே சுட்டுக் கொல்லப்படுவதைத் தடுக்கும் முயற்சி இல்லை. கடவுச் சீட்டு வாங்க சென்னை வரை வந்து விட்ட பேராசிரியர் லோகநாதனின் உறவினர்கள் விமானக் கட்டணத்துக்குப் பணமில்லாமல் மீனம்பாக்கத்தில் தவித்ததை போல, கருணாநிதி தலைமையில் சட்டப்பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, துக்கம் தெரிவிக்கிறார்கள்; பேராசிரியரின் உறவினர்களை இலவசமாக அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கிறார்கள்.

இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் ஏதாவது சேவை செய்வார்கள் என்ற ''நம்பிக்கை''யில்தான் மனிதவள மேம்பாடு என்ற பெயரில் ஒரு பொறியியலாளர், ஒரு மருத்துவர், ஒரு விஞ்ஞானி, ஒரு கல்வியாளரை உருவாக்க பொதுப்பணம் கோடிக் கணக்கில் செலவிடப்படுகிறது. ஆனால் இவர்களிடம் முழுக்க முழுக்க சுயநல - பிழைப்புவாதம்தான் நிரம்பி வழிகிறது; அவர்களால் இந்த நாடும் மக்களும் அடைந்த பெருமை, நன்மை ஏதும் கிடையாது. தானும், முடிந்தவரை தம் உறவினர்களும் அமெரிக்காவிற்குப் போய் பச்சை அட்டை வாங்கிக் கொண்டு சொகுசாக எப்படி வாழ்வது என்பது பற்றியே அவர்கள் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ''என்னிடம் அறிவிருக்கிறது, அதற்கு நல்ல விலை கொடுப்பவர்கள் யாராக இருந்தாலும் விற்கத் தயாராக இருக்கிறேன். அதிலென்ன தப்பு?'' என்று கேட்கிறார்கள். ஆபாசச் சினிமாக்காரிகள்கூட தன்னிடம் கவர்ச்சி இருக்கிறது, பணத்திற்கு அதைக் காட்டுவதில் என்ன தப்பு இருக்கிறது என்று கேட்கிறார்கள்.

அந்நிய மோகமும் அடிமைத்தனமும் தலைக்கேறியதால்தான் கள்ளக் கடவுச் சீட்டு வைத்துக் கொண்டும் ஆள்மாறாட்டம் செய்தும் மேலைநாடுகளுக்கு ஓடுகிறார்கள். இதற்கான கிரிமினல்-தொழில் தரகர்களாக சில சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களே உள்ளனர். அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள உலக வர்த்தகக் கழகத்தின் இரட்டைக் கோபுரத்தின் மீது அல்கொய்தா தீவிரவாதிகள் நடத்திய விமானத் தாக்குதல்; கனடாவில் சீக்கியத் தீவிரவாதிகள் நடத்திய விமானத் தகர்ப்பு; வெர்ஜீனியா பல்தொழில் நுட்பப் பல்கலைக் கழகத் துப்பாக்கிச் சூடு; கொலம்பியா விண் ஓட விபத்து போன்ற சம்பவங்களால் அந்த ஓடுகாலிகள் பலியாகிப் போகும் போது நாம் இவ்வளவு தூரம் அக்கறைப்பட வேண்டிய அவசியமில்லை. இவையெல்லாம் இந்த ஓடுகாலிகளின் அமெரிக்கப் புரவலர்களான ஏகாதிபத்தியவாதிகள் பெற்றெடுத்த செல்லப் பிள்ளைகளின் கைவரிசைகள்தாம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்க வெறிதான் பயங்கரவாதமாகவும் - எதிர்ப்பயங்கரவாதமாகவும் உருவெடுத்திருக்கிறது; தன்னல வெறி, தனிமைவாதம் ஆகிய வக்கிரம் கொண்ட அமெரிக்க சமூக-கல்வி-பண்பாடுதான், வெர்ஜீனியா பல்கலைக்கழகத் துப்பாக்கிச் சூடு நடத்திய தென்கொரியப் பிறப்பு இளைஞனை கொலைவெறியனாக்கியது. அமெரிக்க அரசியலில் ஆதிக்கம் வகிக்கும் ஆயுதமுதலாளிகள் ஊட்டி வளர்க்கும் துப்பாக்கிக் கலாச்சாரம்தான் அந்த இளைஞனை ஆயுதபாணியாக்கியது; பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை இத்தகைய தொடர் படுகொலைகளுக்கு இதுவே காரணம். ●

## தேங்காய்திட்டு:

# அரசின் நிலப்பறி புதுவை மக்களின் போர்க்கோலம்

**வி**ளைநிலங்களைப் பறித்து, பன்னாட்டு ஏகபோக கம்பெனிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கத் துடித்த மே.வங்க போலி கம்யூனிச அரசுக்கு எதிராக, நந்திகிராம மக்கள் நடத்திய போராட்டத்தின் இடியோசை ஓயும் முன்பே, அதன் எதிரொலி போல புதுச்சேரி மாநிலத்தில் துறைமுக விரிவாக்கத்திற்காக விளைநிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதை எதிர்த்து நிற்கும் தேங்காய்திட்டு கிராம மக்களின் போராட்டம் தொடர்கிறது.

புதுவையில் தி.மு.க., பா.ம.க. ஆதரவுடன் காங்கிரசு ஆட்சி நடத்தி வருகின்றது. நாடு முழுவதும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவி, நாட்டைப் பன்னாட்டுக் கம்பெனிகளின் வேட்டைக்காடாக மாற்றிவரும் காங்கிரசு கும்பல், தாங்கள் ஆளும் புதுச்சேரியில் மட்டும் அதனைச் செயல்படுத்தாமல் விட்டுவிடுமா என்ன? பன்னாட்டு ஏகபோக முதலாளிகளே வியக்கும் வண்ணம் நான்கு பகாசுரத் திட்டங்கள் மூலம் புதுவை மாநிலத்தையே கூறுபோட்டு விற்கும் முயற்சியில் அம்மாநில அரசு இறங்கியுள்ளது. இதன்படி மிகச்சிறிய புதுவை மாநிலத்தில் இரண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், இரண்டு துணை நகரங்கள், துறைமுக விரிவாக்கம், விமான நிலைய விரிவாக்கம் - என ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்களை விழுங்கக்கூடிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, இவற்றுக்கென நிலங்களை ஆக்கிரமிக்கும் வேலைகளும் தொடங்கிவிட்டன.

இப்பகாசுரத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் புதுவை மாநில மக்களில் பெரும்பாலோர் வீடிழந்து, நிலமிழந்து, வாழ்விழந்து சொந்த மண்ணிலேயே அகதிகளாகும் பேரபாயம் நேரிடும். விவசாயமும்-விவசாயிகளும், மீனவர்களும்-மீன்பிடித் தொழிலும், கடற்கரையும் நீராதாரங்களும் நாசமாகும். சுற்றுச்சூழல் பாதிக்கப்படும்.

புதுச்சேரி கடற்கரைப் பகுதி அதிக ஆழமில்லாததால், இதுவரை புயல் கரையைக் கடக்காத மாநிலமாக புதுச்சேரி இருந்து வருகிறது. துறைமுக விரிவாக்கம் என்ற பெயரால் 400 மீட்டர் அகலம் 20 மீட்டர் ஆழத்துக்கு மணல் அகற்றப்பட்டால் இனிவரும் காலங்களில் புயல் மிக எளிதில் இப்பகுதியைத் தாக்கும். மேலும், கடற்கரை ஆழப்படுத்தப்பட்டால் கடல்நீரின் அழுத்தம் அதிகரித்து, நிலத்தடி நீரானது முற்றிலும் உப்புநீராகிப் போகும். இதனால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு, உப்பு நீரால் விவசாயமும் செய்ய முடியாத நிலை ஏற்படும். சரக்குக் கப்பல்களுக்குத் தேவைப்படும் இலட்சக்கணக்கான லிட்டர் தண்ணீர் புதுச்சேரியில் உறிஞ்சி எடுக்கப்பட்டால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து நிலம் பாலைவனமாகி, அப்பகுதியெங்கும் வெப்பம் அதிகரிக்கும். துறைமுக விரிவாக்கத் திட்டத்தின் படி, இலட்சக்கணக்கான டன்கள் அளவுக்கு மலைபோல நிலக்கரி மற்றும் இரும்புக் கழிவுகள் இறக்குமதியாகி குவிக்கப்பட்டால், அதன் துகள்கள் காற்றில் பறந்து மக்களுக்கு சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்தும்.

இத்திட்டங்களால் விளைநிலங்கள் பறிக்கப்பட்டு, விவசாயிகள் நாடோடிகளாக அலைய வேண்டிய அவல நிலை ஏற்படும். சுருக்கமாகச் சொன்னால் தரகுப் பெருமுதலாளிகளும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் சூறையாடுவதற்கென்றே உருவாகியுள்ள இத்திட்டங்களால் புதுச்சேரி மாநிலமே சுடுகாடாகிப் போகும். இவற்றைப் படிப்படியாக உணரத் தொடங்கியுள்ள புதுச்சேரி மாநில உழைக்கும் மக்கள், தமது போர்க்குணமிக்க போராட்டங்களால் அம்மாநிலத்தையே அதிர வைத்து வருகின்றனர்.

உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளிகளின் பகற்கொள்ளை - சூறையாடலுக்கென்றே 'வளர்ச்சி'யின் பெயரால் உருவாக்கப்பட்டுள்ள திட்டங்களுள் ஒன்றுதான் துறைமுக விரிவாக்கத்திட்டம். ரூ. 2,600 கோடி மதிப்பிலான இத்திட்டம் ''பாண்டிச்சேரி போர்ட் லிமிடெட்'' என்ற தனியார் கம்பெனியிடம் கடந்த பிப்ரவரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறைமுக விரிவாக்கத் திட்டத்தால், ஏறத்தாழ 300 ஏக்கர் விளைநிலங்கள் பறிக்கப்படவுள்ள கிராமம்தான் தேங்காய்திட்டு.

தங்களது வீடும் நிலமும் வாழ்வுரிமையும் பறிக்கப்படுவதைக் கண்டு பீதியடைந்த இக்கிராம மக்கள், இத்திட்டத்தைக் கைவிடக் கோரி உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கி பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து போராடினார்கள். வீடுகளில் கருப்புக் கொடியேற்றியும், உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தும், மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் சுற்றுச்சூழல் துறை நடத்திய கூட்டத்தில் இத்திட்டத்திற்கு எதிர்த்து தெரிவித்தும் கூட ஆட்சியாளர்கள் அசைந்து கொடுக்கவில்லை.

துறைமுக விரிவாக்கத் திட்டத்தைக் கைவிடக் கோரி தேங்காய்திட்டு கிராம மக்களின் சாலை மறியல் போராட்டம்.



www.padippakam.com



திமிர் பேச்சுக்கு பதிலடி: பாடை கட்டி ஊர்வலமாக வந்து அமைச்சர் வல்சராஜின் கொடும்பாவி எரிப்புப் போராட்டம்.

இந்நிலையில், கடந்த மார்ச் 18-ஆம் தேதியன்று துறைமுகப் பகுதியிலும் அரசு புறம்போக்கு பகுதியிலும் ஆரம்பகட்ட வேலைகளை "பாண்டிச்சேரி போர்ட் லிமிடெட்" நிறுவனம் தொடங்கியது. துறைமுகப் பகுதியிலுள்ள நீண்ட சுற்றுச் சுவர் இடிக்கப்பட்டு பணிகள் தொடங்கிவிட்டதை அறிந்த தேங்காய் திட்டு கிராம மக்கள் ஆவேசமடைந்து, அத்தனியார் நிறுவனத்தின் பெயர் பலகையை உடைத்தெறிந்து, அந்நிறுவனத்தின் அலுவலகத்தைச் சூறையாடினர். பின்னர், துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கு எதிர்த்து தெரிவித்து சாலை மறியல் போராட்டத்தில் இறங்கினர். சுற்றுச்சூழல் துறையின் அனுமதியின்றி பணிகளைத் தொடங்கிய தனியார் நிறுவனம் மீது நடவடிக்கை எடுப்பதாக போலீசார் உறுதியளித்ததைத் தொடர்ந்து, தேங்காய்திட்டு கிராம மக்கள் போராட்டத்தை தற்காலிகமாக விலக்கிக் கொண்டனர்.

இத்தனைக்கும் பின்னரும் இத்துறைமுக விரிவாக்கத் திட்டத்தை காங்கிரசு அரசு கைவிடாத நிலையில், தேங்காய் திட்டு கிராம மக்கள் "நில ஆர்ஜித எதிர்ப்புக் குழு"வைக் கட்டியமைத்து அதன் தலைமையில் போராட்டத்தைத் தொடர்ந்தனர். அனைத்து எதிர்க்கட்சிகளிடமும் ஆதரவு கோரியதோடு, அரசைக் கண்டித்து தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் மூலம் பிரச்சாரம் செய்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அதைத் தொடர்ந்து மார்ச் 27-ஆம் தேதியன்று துறைமுக விரிவாக்கத்தை கைவிடமறுக்கும் அரசை எதிர்த்து, சட்டமன்றத்தை முற்றுகையிட்டு தமது ரேஷன் கார்டு நகல்களை ஒப்படைக்கும் போராட்டத்தை அறிவித்தனர். இப்போராட்டத்தை ஆதரித்து முதலியார்பேட்டை வியாபாரிகள் நலச் சங்கத்தினர் அந்நாளில் அப்பகுதியெங்கும் கடைகளில் கருப்புக் கொடி ஏற்றினர். மார்ச் 27-ஆம் நாளன்று தேங்காய் திட்டு கிராம மக்கள் மட்டுமின்றி, வியாபாரிகள், அறிவுத்துறையினர், மாணவர்கள், மீனவர்கள் என அனைத்து தரப்பு மக்களும் திரள ஏறத்தாழ 5000 பேர் பங்கேற்ற மாபெரும் பேரணி சட்டமன்றத்தை நோக்கி விண்ணதிரும் முழக்கங்களுடன் முன்னேறியது. வழியிலேயே அவர்கள் போலீசாரால் மறிக்கப்பட்டு ஏறத்தாழ 1500 பேர் கைது செய்யப்பட்டனர். இதைக் கண்டித்தும், துறைமுக விரிவாக்கத் திட்டத்தை எதிர்த்தும் உழைக்கும் மக்கள் தமது ரேசன் கார்டு நகல்களை தீயிட்டுக் கொளுத்தி முழக்கமிட்டனர்.

மக்களின் உறுதிமிக்க இப்போராட்டங்களைக் கண்டு ஆத்திரமடைந்த துறைமுகத்துறை அமைச்சரான வல்சராஜ், "எவ்வளவு எதிர்ப்புகள் வந்தாலும் இத்திட்டத்தை கண்டிப்பாக நிறைவேற்றியே தீருவோம்; மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியம்" என்று மே.வங்க பாசிச முதல்வர் புத்ததேவ் வழியில் சட்டமன்றத்திலேயே கொக்கரித்தார். மேலும் போராடிய மக்களைத் தரக் குறைவான வார்த்தைகளால் ஏசி, போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி திமிராகச் சாடினார். இதைக் கண்டு வெகுண்டெழுந்த தேங்காய்திட்டு கிராம மக்கள், அமைச்சர் வல்சராஜ் வீட்டை முற்றுகையிட்டு போராடத் தீர்மானித்தனர். இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இத்திட்டம் கசிந்துவிட, அரண்டுபோன புதுவை அரசு, அமைச்சர் வல்சராஜ் வீட்டுக்கு மூன்று அடுக்கு போலீசு பாதுகாப்பு போட்டது. இதனால் கிராம மக்கள் இம்முற்றுகைப் போராட்டத்தைக் கைவிட்டு அமைச்சரின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை நடத்த முடிவு செய்தனர்.

திட்டமிட்டபடியே ஏப்ரல் 13-ஆம் நாளன்று தாரை தப்பட்டைகள் முழங்க, அமைச்சரின் கொடும்

மறுகாலனியாக்கத்தின் பாசிச கோரமுகம்:
போராடும் மக்கள் மீது போலீசின் கொலைவெறித் தாக்குதல்.





வாழ்வுரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து புதுவை மக்களின் சட்டமன்ற முற்றுகைப் போராட்டம்.

பாவியை அலங்கார சவப் பாடையில் ஏற்றி கிராம மக்கள் ஊர்வலமாக எடுத்து வந்தனர். பெண்கள் ஒப்பாரி வைக்க, இளைஞர்கள் பட்டாசு வெடித்து ஆட்டம் பாட்டத்துடன் இக்கொடும்பாவி பாடையை தூக்கி வந்தனர். தகவலறிந்து முதலியார்பேட்டை போலீசு நிலைய ஆய்வாளர் ரவிக்குமார், பெரும்படையுடன் போலீசை திரட்டி வந்து ஊர்வலத்தைத் தடுத்ததோடு பெண்களை ஆபாசமாகத் திட்டினார். ஆவேசமடைந்த பெண்கள் சவத்திற்குத் தெளிக்க வைத்திருந்த மஞ்சள்-குங்குமக் கரைசலை ஆய்வாளர் மீது ஊற்றி அவருக்கு மஞ்சள் நீராட்டு விழா நடத்தினர். இதற்கிடையே அமைச்சர் வல்சராஜின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. அதைத் தடுத்து கூட்டத்தைக் கலைக்க போலீசார் காட்டுமிராண்டித்தனமாக தடியடி நடத்தினர். இத்தாக்குதலில் 14 பெண்கள் உள்ளிட்டு 20 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். போலீசார் தமது கடமையைச் செய்ய விடாமல் தடுத்து கலவரத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி 257 பேர் மீது போலீசு பொய் வழக்கு போட்டுள்ளது.

இக்கொடுஞ்செயலைக் கண்டு வெகுண்டெழுந்த மக்கள், போலீசு மிருகங்களை எதிர்த்து முதலியார்பேட்டை போலீசு நிலையத்தை முற்றுகையிட்டுப் போராட ஊர்வலமாகச் சென்றனர். போராடும் மக்களின் கோபாவேசத்தைக் கண்டு பீதியடைந்த போலீசார், முதலியார்பேட்டை போலீசு நிலையத்தை உடனடியாக காலி செய்து, துப்பாக்கிகள் மேசை - நாற்காலிகள், ஆவணங்கள் அனைத்தையும் ஒரு லாரியில் அள்ளிப் போட்டுக் கொண்டு தப்பியோடினர். அப்போலீசு நிலையம் பூட்டு போடப்பட்டு, மத்திய ரிசர்வ் போலீசாரின் பாதுகாப்பில் விடப்பட்டது. மக்களின் எழுச்சியைக் கண்டு அரசு எந்திரம் அரண்டுபோய் விக்கித்து நின்றது.

அடுத்த கட்டமாக, மீண்டும் சட்டமன்ற முற்றுகைப் போராட்டத்தை நடத்த கிராம மக்கள் முடிவு செய்தனர். புதுவை முதல்வர் ரங்கசாமி, மக்களின் வாழ்வுரிமையைப் பாதிக்கும் எந்தத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படாது என்று உறுதியளித்து சமரசம் பேசியதால், தற்காலிகமாக இப்போராட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தேங்காய் திட்டு கிராம மக்களின் போராட்டம் மட்டுமல்ல; சிறப்புப் பொருளாதார மண்டலம், துணை நகரம், விமான நிலைய விரிவாக்கம் ஆகிய திட்டங்களால் விளைநிலங்களைப் பறிகொடுத்த மக்கள் ஆர்ப்பாட்டம், கருப்புக் கொடியேற்றுதல், சாலை மறியல் என அடுத்தடுத்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கடந்த இரு மாதங்களாக புதுவை மாநிலமே இத்திட்டங்களுக்கு எதிராகப் போர்க்கோலம் பூண்டு நிற்கிறது.

தமது வாழ்வுரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து மக்கள் போராடத் தொடங்கியதும், அரசியல் ஆதாயம் கருதி எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகள் இப்போராட்டங்களை ஆதரித்து அறிக்கைகள் வெளியிடுகின்றன. ''உங்களோடு சேர்ந்து தெருவில் இறங்கிப் போராடுவேன்; பிரதமரை நேரில் சந்தித்து முறையிடுவேன்'' என்றெல்லாம் சீறி வெடிக்கிறார், பா.ம.க. தலைவர் இராமதாசு. புதுவை துறைமுக விரிவாக்கத் திட்டம் முதல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் வரை அனைத்து முடிவுகளையும் மைய அரசுதான் எடுத்திருக்கிறது. அமைச்சரவையின் முடிவுகளில் மகன் அன்புமணி கையெழுத்திடுகிறார். தந்தையோ இங்கே தாவிக் குதிக்கிறார்.

பா.ம.க. மட்டுமல்ல, எல்லா வண்ண ஓட்டுக் கட்சிகளும் ஆட்சியில் இருக்கும்போது தனியார்மய - தாராளமய - உலகமயக் கொள்கைகளைத் தீவிரமாக அமல்படுத்துவது, எதிர்க்கட்சியாக உள்ளபோது மக்கள் போராட்டங்களை ஆதரிப்பதாக வாய்ச்சவடால் அடிப்பது என்ற நாடகத்தை நடத்தி வருகின்றன. கடந்த 15 ஆண்டுகளில் மத்தியிலும் மாநிலத்திலும் பல ஆட்சிகள் மாறிவிட்டன. ஆனால் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற ஒரே கொள்கைதான் அமல்படுத்தப்படுகிறது. உலக நாடுகள் அனைத்தையும் கொள்ளையடித்து சூறையாடுவதற்காக பன்னாட்டு நிறுவனங்களால் உருவாக்கப்பட்டுள்ள உலக வங்கியும் உலக வர்த்தகக் கழகமும் போடும் உத்தரவுகளைத்தான் எல்லா கட்சி அரசாங்கங்களும் நிறைவேற்றி வருகின்றன. இவையனைத்தும் வெறும் பொருளாதாரக் கொள்கைகள் அல்ல; இவை நாட்டையும் மக்களையும் அடிமைப்படுத்தும் மறுகாலனியாக்கக் கொள்கைகள்.

சுருக்கமாகச் சொன்னால், விளைநிலங்களையும் வாழ்வுரிமையையும் பறித்து மறுகாலனிய ஆக்கிரமிப்பு எனும் உள்நாட்டுப் போரைப் பிரகடனம் செய்திருக்கிறார்கள், எதிரிகள். இப்போரை, மக்கள் போரினால் மட்டுமே முறியடிக்க முடியும். எனவே, தமது வாழ்வுரிமை பறிக்கப்படுவதை எதிர்த்துப் போராடி வரும் புதுவை மக்கள், இப்போராட்டங்களை மறுகாலனிய எதிர்ப்புப் போராட்டமாக விரிவுபடுத்தி முன்னெடுத்துச் செல்ல வேண்டும். மே.வங்கத்தின் நந்திகிராம மக்கள், அப்பகுதியில் அரசு எந்திரம் செயல்பட முடியாமல் முடக்கி வைத்துப் போராடி, அங்கு சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கத் துடித்த போலி கம்யூனிஸ்ட் அரசைப் பணிய வைத்ததைப் போல, புதுவை மக்கள் தமது போராட்டங்களைக் கட்டியமைக்க வேண்டும்.

ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்து, நாட்டுப்பற்றும், ஜனநாயக உணர்வும் புரட்சிகர சித்தாந்தமும் கொண்ட புதிய போராட்டத் தலைமையின்கீழ் புதுவை மக்கள் போராடும்போது மட்டுமே, இம்மறுகாலனிய ஆக்கிரமிப்புப் போரை முறியடிக்க முடியும்; நந்திகிராம மக்களைப் போல எப்பேர்ப்பட்ட எதிரியையும் மண்டியிடச் செய்ய முடியும். அத்தகையதொரு புரட்சிகரத் தலைமையையும், போராட்டங்களையும் கட்டியமைப்பதே, இன்று போராடி வரும் புதுவை மக்களின் உடனடிக் கடமையாக உள்ளது.

– பு.ஜ. செய்தியாளர்கள்,
புதுச்சேரி.

www.padippakam.com

# நரேந்திர மோடி:
# 'தேசிய' நாயகனா? அரசு பயங்கரவாத கொலைகாரனா?

கடந்த 2005-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் தேதியன்று குஜராத் மாநிலத் தலைநகர் அகமதாபாத்தின் புறநகர்ப் பகுதியில் சோராபுதீன் ஷேக் என்பவர், போலீசுடன் நடந்த மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், இவர் லஷ்ஹர்-இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்த முஸ்லிம் தீவிரவாதி என்றும், இவர் குஜராத் முதல்வர் மோடியையும், விஷ்வ ஹிந்து பரிசத் தலைவர்களையும் கொல்ல வந்த பயங்கரவாதி என்றும் போலீசார் அறிவித்தனர்.

உண்மையில், சோராபுதீன் தீவிரவாதியோ பயங்கரவாதியோ அல்ல; அவர் ராஜஸ்தானைச் சேர்ந்தவர். சோராபுதீனின் சகோதரரான ரூபாபுதீன், இந்த மோதலில் சோராபுதீன் கொல்லப்பட்டது பற்றியும் அவருடன் சென்ற அவரது மனைவி கௌசர்பானு காணாமல் போனது பற்றியும் மைய புலனாய்வுத் துறை விசாரிக்கக் கோரி உச்சநீதி மன்றத்தில் முறையிட்டார். குஜராத் மாநில அரசிடம் இதுபற்றி விசாரித்து அறிக்கை தருமாறு உச்சநீதி மன்றம் நிர்ப்பந்தித்ததால், அம்மாநில அரசு கீதாஜோரி என்ற புலனாய்வு அதிகாரியின் தலைமையில் விசாரணைக் குழுவொன்றை நியமித்தது.

2005 நவம்பர் 23-ஆம் நாளன்று, ஹைதராபாத் நகரிலிருந்து மகாராஷ்டிர மாநிலம் சாங்லி நகருக்குப் பேருந்தில் பயணம் செய்த சோராபுதீன் தம்பதியினரையும், துளசிராஜ் பிரஜாபதி என்பவரையும் சீருடைய அணியாத ராஜ்குமார் பாண்டியன் எனும் பயங்கரவாத எதிர்ப்புப் படையைச் சேர்ந்த குஜராத் போலீசு உயரதிகாரி தலைமையிலான குழுவினர், நள்ளிரவில் பேருந்தை வழிமறித்து நிறுத்தி, அம்மூவரையும் இறக்கி தங்கள் வாகனங்களில் கடத்திச் சென்றனர்.

கடத்திச் செல்லப்பட்ட இம்மூவரில் சோராபுதீன், மூன்று நாட்களுக்குப் பிறகு அகமதாபாத் புறநகர் பகுதியில் போலி மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டு, மோடியைக் கொல்ல வந்த பயங்கரவாதியாகச் சித்தரிக்கப்பட்டார். போலீசு ஆள்காட்டியான துளசிராஜ் பிரஜாபதி, இப்படுகொலையை வெளியே கக்கிவிடுவாரோ என்று சந்தேகித்து அவரையும் போலீசு கொன்றொழித்துத் தடயங்களை அழித்து விட்டது. சோராபுதீனின் மனைவி கௌசர்பானு, சபர்கந்தா காட்டுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு போலீசாரின் கும்பல் வன்புணர்ச்சிக்குப் பின் சுட்டுக் கொல்லப்பட்டு, எரித்து சாம்பலாக்கப்பட்டார்.

கடந்த 2006-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் குஜராத் மாநில அரசிடம் சமர்பித்த இடைக்கால அறிக்கையில், உதிரத்தை உறைய வைக்கும் இந்த உண்மைகளை கீதாஜோரி விசாரணைக் குழு வெளிக்கொணர்ந்தது. தற்போது எல்லா விசயங்களும் அம்பலமாகிப் போனதால், வேறு வழியின்றி மூன்று போலீசு உயரதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மோடியைக் கொல்ல முயன்றதாகக் கதைகட்டி நடத்தப்பட்ட இப்போலி மோதல் நாடகத்தைத் தலைமையேற்று வழி நடத்திய வஞ்சாரா, ராஜ்குமார் பாண்டியன், தினேஷ்குமார் ஆகிய மூன்று போலீசு உயரதிகாரிகளும் மோடிக்கு மிக நெருக்கமானவர்கள்; அவரது கண்ணும் காதும் மூக்கும் மூளையுமாகச் செயல்பட்டவர்கள்.

இவர்களில் பயங்கரவாத எதிர்ப்புப் படைக்குழுவின் டி.ஐ.ஜி.யான வஞ்சாரா ''மோதல் கொலை நிபுணர்'' என புகழப்பட்டவர். இதுவரை 9 போலி மோதல்கள், 15 பேர் படுகொலை என விரியும் இவரது பயங்கரவாதக் கொலைப்பட்டியலில், மும்பையின் ஏழை முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவி இஸ்ரத் ஜெஹானும் அடக்கம். கடந்த 2004-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட இம்மாணவி, மோடியைக் கொல்ல வந்த பயங்கரவாதியாகவே சித்தரிக்கப்பட்டார்.

போலி மோதல் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள அரசு பயங்கரவாதிகள்: ராஜ்குமார் பாண்டியன் (இடது), டி.ஜி.வஞ்ஜாரா (நடுவில்) மற்றும் தினேஷ்குமார்.



குஜராத்தின் பயங்கரவாத போலீசார், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை இத்தகைய போலி மோதல் கொலைகளை நடத்தி, ஒவ்வொரு முறையும் தாவூத் இப்ராஹிமிடமிருந்து பாகிஸ்தான் உளவுத்துறை வரை பழிபோட்டு, மோடியை தேசிய அளவில் பாதுகாக்கப்பட வேண்டிய அதிமுக்கிய தலைவராகச் சித்தரித்து, இந்துவெறி - தேசியவெறியை கிளறிவிட்டு வந்துள்ளனர். கடந்த ஈராண்டுகளில் மட்டும் 25-க்கும் மேற்பட்ட இத்தகைய போலி மோதல் கொலைகள் போலீசாரால் நடத்தப்பட்டுள்ளன.

இப்போது போலி மோதல் கொலைகள் மூலம் மோடியின் பயங்கரவாதச் சதிகள் அம்பலமான பின்னரும், இக்கொலைகார இந்துவெறி பாசிசத் தளபதியை, இந்திய நாட்டின் சட்டம் தண்டிக்காமல் வேடிக்கை பார்க்கிறது. மதவெறி சக்திகளை வீழ்த்தப் போவதாக சவடால் அடித்து ஆட்சியைப் பிடித்த காங்கிரசு கூட்டணி அரசு கை கட்டி நிற்கிறது. இடது-வலது போலி கம்யூனிஸ்டு கட்சிகளோ, காங்கிரசு கூட்டணி அரசை முட்டுக் கொடுத்து ஆதரித்துக் கொண்டு, மதவெறி சக்திகளிடமிருந்து நாட்டைக் காக்கப் போவதாக வீர வசனம் பேசிக் கொண்டிருக்கின்றன.

• தனபால்

www.padippakam.com

## திருமாவளவன் - ரவிக்குமார்

# ரிலையன்ஸின் புதிய பாதந்தாங்கிகள்

நண்பனைப் போல அரிதாரம் பூசிக் கொண்டு திரியும் துரோகிகளின் உண்மை முகம் நெருக்கடிகள் முற்றும் பொழுதுதான் அம்பலத்துக்கு வரும். மளிகை மற்றும் காய்கறி வியாபாரத்தில் இறங்கியுள்ள ரிலையன்ஸ் ஃபிரெஷ், பிக் பஜார் போன்ற தரகு முதலாளித்துவ நிறுவனங்களை எதிர்த்து தமிழகத்தைச் சேர்ந்த சிறு வியாபாரிகளும், கடைச் சிப்பந்திகளும் போராடத் தொடங்கியிருக்கும் நேரத்தில், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் திருமாவளவனும்; அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமாரும் ரிலையன்ஸ் என்ற பகற்கொள்ளைக்காரனுக்கு ஆதரவாகப் போர்க்களத்தில் குதித்துள்ளனர்.

''ரிலையன்ஸ் காய்கறி கடைகளால் சிறு வியாபாரிகளுக்கு எந்தப் பாதிப்பும் வராது; பாதிப்பு வரும் என்பது மிகைப்படுத்தப்பட்ட பிரச்சாரம்'' என ரவிக்குமார் சட்டமன்றத்திலேயே பேசி, ரிலையன்ஸுக்கு வக்காலத்து வாங்கினார். சென்னை-கோயம்பேட்டில் உள்ள விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்த சிறு வியாபாரிகளும், கூலித் தொழிலாளர்களும், ''இது, ரவிக்குமாரின் சொந்தக் கருத்தா இல்லை, கட்சியின் முடிவா?'' எனக் குழம்பிப் போன நேரத்தில், திருமாவளவன், ''ரிலையன்ஸ் நிறுவனத்தின் சில்லறை வியாபாரம் என்ற கொள்கைக்கு நாங்கள் எதிராகத்தான் உள்ளோம்; ஆனாலும், ரிலையன்ஸின் காய்கறிக் கடையால், சில்லறை வியாபாரிகளுக்குப் பாதிப்பு வராது; ரிலையன்ஸ் பெரிய நகரங்களில் மட்டும் கடைகளைத் திறந்தால் எதிர்க்க மாட்டோம்; தமிழகம் தழுவிய அளவில் திறந்தால் எதிர்ப்போம்'' என ''விளக்கமளித்து'', குழம்பிப் போன தோழர்களை மண்டையைப் பிய்த்துக் கொள்ள வைத்துவிட்டார். திருமாவளவனின் இந்த விளக்கம், ஆர்.எஸ்.எஸ்.-இன் சுதேசி மோசடிக்கு நிகரானது.

''தமிழகத்தில் 3,000 கோடி ரூபாய் முதலீட்டில், 75 நகரங்களில் 380 பேரங்காடிகளையும் (சூப்பர் மார்க்கெட்) 85 மீ அங்காடிகளையும் (ஹைபர் மார்க்கெட்) திறக்கப் போவதாக'' ரிலையன்ஸ் அறிவித்திருக்கிறது. இந்த 75 நகரங்களில் சென்னை, மதுரை போன்ற பெரிய நகரங்கள் மட்டுமின்றி, ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி போன்ற கிராமப்புறம் சார்ந்த சிறு நகரங்களும் அடங்கும். உண்மை இவ்வாறு இருக்கும் பொழுது, ''ரிலையன்ஸை இப்பொழுது எதிர்க்க மாட்டோம்; அந்நிறுவனம் தமிழகம் தழுவிய அளவில் கடை திறந்தால் எதிர்ப்போம்'' என திருமாவளவன் ''உதார்'' விடுவது, கடைந்தெடுத்த பித்தலாட்டம் ஆகும்.

ரிலையன்ஸ் நிறுவனத்தின் மீது பிற்பாடு பாய்வதற்காக, திருமாவளவன் இப்பொழுது ''பதுங்கவில்லை''; மாறாக, ரிலையன்ஸின் காலடிகளில் பம்பி படுத்துவிட்டார் என்பதே உண்மை. ''ரிலையன்ஸ் நிறுவனம் டெலிகாம் துறைக்குள் வந்த பிறகுதான் அதில் பெரிய புரட்சியே ஏற்பட்டது; கோயம்பேட்டில் சாதாரண மூட்டைத் தூக்கும் தொழிலாளியான தமிழ்மாறனின் கையிலும் செல்போன் உள்ளது'' என அவர் ரிலையன்ஸ் நிறுவனம் பற்றித் துதி பாடியிருப்பதையே அவரின் சரணாகதிக்கு ஆதாரமாகக் காட்டலாம்.

ரிலையன்ஸ் நிறுவனம் தொலைபேசித் துறையில் ''புரட்சி''யைச் செய்வதற்காக அரசுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல். மொட்டையடிக்கப்பட்டது ஊரறிந்த உண்மை. அதே போன்ற புரட்சியை சில்லறை வணிகத்திலும் நடத்த விரும்புகிறது ரிலையன்ஸ். ஆனால், அவர்கள் மொட்டையடிப்பதற்கு இங்கே அரசுத்துறை நிறுவனம் எதுவும் இல்லை. திருமாவளவன் குறிப்பிடும் கோயம்பேட்டை நம்பி வாழும் தமிழ்மாறன் போன்ற தலித் தொழிலாளர்களையும்; ஆயிரக்கணக்கான சில்லறை வியாபாரிகளையும், தள்ளுவண்டி வியாபாரிகளையும் தான் ரிலையன்ஸ் மொட்டையடிக்கப் போகிறது.

இந்த ஏழைத் தமிழர்களுக்காக இப்பொழுது போராட முன் வராத திருமாவளவன்-ரவிக்குமார் இணை, ''விலை

## சிவப்புச் சாயம் வெளுக்கிறது!

தமிழகத்து 'மார்க்சிஸ்டு'கள் ரிலையன்ஸ் ஃபிரெஷ்ஷுக்கு எதிராக அறிக்கைப் போர் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது, 'மார்க்சிஸ்டு' கட்சியின் தலைவர்களுள் ஒருவரான சமர் போரா, ''விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நல்ல விலை கொடுப்போம் என்றும்; நுகர்வோருக்குத் தரமான பொருட்களை விற்பனை செய்வோம் என்றும் ரிலையன்ஸ் நிறுவனம் கூறியிருக்கிறது. அதன்படி நடந்து கொண்டால், அந்நிறுவனத்தை ஏன் எதிர்க்க வேண்டும்? வேளாண் துறையில் அந்நிய நேரடி முதலீட்டைத்தான் இடதுசாரிக் கட்சிகள் எதிர்க்கின்றன. ரிலையன்ஸோ அல்லது வேறு ஏதாவது இந்திய நிறுவனமோ வர்த்தகம் செய்வதை எதிர்க்கவில்லை'' எனக் கூறியிருக்கிறார்.

இது அவரின் தனிப்பட்ட கருத்து எனக் கூறி, தமிழகத்து 'மார்க்சிஸ்டு'கள் தப்பித்து கொண்டுவிட முடியாது. மேற்கு வங்க 'மார்க்சிஸ்டு' கட்சி, அம்மாநிலத்தில் ரிலையன்ஸ் சில்லறைக் கடைகளைத் திறக்க எந்த மறுப்பும் தெரிவிக்காத பொழுது, 'இடதுசாரி'க் கூட்டணியில் இருக்கும் பார்வார்டு பிளாக் கட்சிதான், சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ரிலையன்ஸ் சில்லறைக் கடைகளைத் திறக்க அனுமதிக்க வேண்டும் என முரண்டு பிடிக்கிறதாம். இந்தக் 'கொள்கை' முரண்பாட்டைக் கேள்விப்படும் பொழுது, நமக்குப் புல்லரித்துப் போகிறது.

எப்படிப்பட்ட நிபந்தனைகள் போட்டாலும், அவற்றையெல்லாம் ஏய்த்துக் கல்லா கட்டுவதில் அம்பானி தொழில் குழுமம் கில்லாடிகள் என்பது 'இடதுசாரி' களும் அறிந்த உண்மை. இருந்தாலும் என்ன செய்வது, தங்களைச் ''சிவப்பாக''க் காட்டிக் கொள்ள, 'இடதுசாரி'க் கூட்டணி ஏதாவது செய்து தொலைக்க வேண்டி இருக்கிறதே!

www.padippakam.com



திருமாவளவன்

**"விலை மலிவு என்பதன் பின்னே உள்ள ரிலையன்ஸின் வியாபாரச் சதியை அம்பலப்படுத்தத் துணியாத திருமாவளவன் - ரவிக்குமார் இணை, ரிலையன்ஸை எதிர்ப்பவர்களை விவசாயிகளின் எதிரிகளாகவும்; காய்கறி வியாபாரிகளின் ஏஜெண்டாகவும் அவதூறு செய்கிறார்கள்."**



ரவிக்குமார்

குறைவாக இருக்கிறது; அதனால்தான் மக்கள் செல்கிறார்கள்'' எனக் கூறி, ரிலையன்ஸ் - பிரெஷ்ஷில் காய்கறி வாங்கப் போகும் மேட்டுக்குடி தமிழர்களுக்கு வக்காலத்து வாங்குகிறார்கள்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, கோக்கும், பெப்சியும் ''விலை மலிவு'' என்ற ஆயுதத்தோடுதான் இந்தியச் சந்தைக்குள் இறங்கின. அதன் விளைவு காளிமார்க், வின்செண்ட் போன்ற பெரிய குளிர்பான நிறுவனங்கள் மட்டுமின்றி, குடிசைத் தொழிலாக நடந்துவந்த ஆயிரக்கணக்கான சோடா தயாரிப்பு கம்பெனிகளும் இருந்த சுவடே தெரியாமல் அழிந்துவிட்டன. உள்ளூர் போட்டியாளர்கள் ஒழிக்கப்பட்ட பிறகு, கோக்-பெப்சியின் விலை கிடுகிடுவென உயர்ந்தது.

இந்தக் கழுத்தறுப்பு பாணி போட்டியைத்தான், ரிலையன்ஸ் சில்லறை வியாபாரத்தில் நடத்தி வருகிறது. தமிழகத்தைச் சேர்ந்த பிளாஸ்டிக் பொருள் உற்பத்தியாளர்கள் 21.07.2006 தேதியிட்ட தினமணி நாளிதழில் ''பிளாஸ்டிக் சாமான்கள் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள் தயாரிப்பதில் ரிலையன்ஸ் ஏகபோகம் வகிப்பதால், மூலப் பொருளின் விலையைத் தன்னிச்சையாக பல மடங்கு உயர்த்தி வருவதாக'' பகிரங்கமாக குற்றஞ் சுமத்தி இருந்தனர். இன்று, ரிலையன்ஸ் - பிரெஷ் ஆயிரக்கணக்கான சிறு வியாபாரிகளோடு போட்டி போட வேண்டியிருப்பதால்தான், தனது கடைகளில் காய்கறிகளையும், பழங்களையும் ''விலை மலிவாக''க் கொடுக்கிறது. நாளை, ரிலையன்ஸும் மற்ற தரகு முதலாளித்துவ நிறுவனங்களும் காய்கறி-மளிகை விற்பனையில் ஏகபோக ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் பொழுது, பிளாஸ்டிக் சாமான் உற்பத்தியாளர்களைப் போலவே, நடுத்தர வர்க்க நுகர்வோரும் ரிலையன்ஸுக்கு எதிராகப் புலம்ப வேண்டிய நிலை ஏற்படும்.

''விலை மலிவு'' என்பதன் பின்னே உள்ள, ரிலையன்ஸின் இந்தச் சதியை அம்பலப்படுத்தத் துணியாத ''தலித்'' 'அறிஞர்' ரவிக்குமார், ரிலையன்ஸை எதிர்ப்பவர்களை, விவசாயிகளின் எதிரிகளாகவும்; காய்கறி வியாபாரிகளின் ஏஜெண்டாகவும் அவதூறு செய்கிறார். கோயம்பேடு இடைத்தரகர், விவசாயிகளிடமிருந்து வாங்கும் கத்தரிக்காய்க்கும், தக்காளிக்கும் தரும் விலையை விட, ரிலையன்ஸ் பத்து காசு அதிகம் கொடுத்துவிட்டால், அம்பானி விவசாயிகளின் நண்பன் ஆகி விடுவாரா?

''விதை தருகிறேன்; உரம் தருகிறேன்; காய்கறிகளைப் பயிர் செய்து கொடுத்தால், அதற்கு நல்ல விலையும் தருகின்றேன்'' என்று விவசாயிகளுக்கு வலை விரித்து அவர்களைத் தன்னுடைய குத்தகை விவசாயிகளாக மாற்றும் வேலையைத்தான் ரிலையன்ஸ் தொடங்கியிருக்கிறது. இதற்காகவே, ''ஒப்பந்த விவசாயம்'' (contract farming), என்ற புதிய பாணி பண்ணையடிமை முறையை விவசாயத்தில் புகுத்தும் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

ரிலையன்ஸ் விரிக்கும் இந்த வலையில் சிக்கிக் கொள்ளும் தமிழகத்து விவசாயிகள் அதிலிருந்து மீள முடியாத கொத்தடிமைகளாக மாட்டிக் கொள்வார்கள். அமெரிக்காவின் பெப்சி நிறுவனத்துக்கு உருளைக் கிழங்கு பயிரிட்டுக் கொடுத்த பஞ்சாப் விவசாயிகள் போண்டியானதைப் போன்ற நிலையை, தமிழகத்தின் விவசாயிகளும் எதிர் கொள்ள நேரிடும்.

திருமாவளவன் - ரவிக்குமார் இணை, சில்லறை வியாபாரத்தில் ரிலையன்ஸ் போன்ற தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் இறங்குவதை மட்டுமல்ல, சிறப்புப் பொருளாதார மண்டலங்களையும் ஆதரிக்கிறார்கள். ''நிலத்தைச் சார்ந்துள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படுமேயானால், அது வேளாண் துறையில் உள்ள சிக்கலையும் தீர்ப்பதாக இருக்கும்'' என ரவிக்குமார் சட்டமன்றத்தில் பேசியிருக்கிறார்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்காக நிலங்கள் வலுக்கட்டாயமாகக் கையகப்படுத்தப்படுவதை எதிர்த்துப் போராடுவதில் விவசாயிகளும், விவசாயக் கூலிகளும், பழங்குடி இன மக்களும்தான் முன்னணியில் உள்ளனர் என்பது தெரிந்திருந்தும்; சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பது பொருள் உற்பத்தியைவிட ரியல் எஸ்டேட் வியாபாரத்திற்காகத்தான் அமைக்கப்படுகிறது என்று நிரூபணமான போதிலும்; சிறப்புப் பொருளாதார மண்டலம் நாட்டின் அரைகுறை இறையாண்மைக்கும் ஆபத்தானது என்பது அம்பலமான பின்னும், அதற்குப் பட்டுக் குஞ்சம் கட்டிவிட முயலுகிறார், 'அறிஞர்' ரவிக்குமார். பட்டுக் குஞ்சம் கட்டிவிட்டால் வெளக்குமாறு சாமரம் ஆகிவிடுமா?

ஓட்டுப் பொறுக்குவதற்காக பார்ப்பன-பாசிச ஜெயாவிடம் கூட்டணிக் கட்டிக் கொண்டு சட்டமன்ற உறுப்பினர் ஆன ரவிக்குமாரிடமிருந்து, இந்தப் பொருளாதார சிந்தனையைத் தவிர, வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது. நாட்டை மறுகாலனியாக்கி வரும் இப்பொருளாதாரத் திட்டங்களுக்குத் துணை நிற்கும் இவர்கள், எந்தத் தாழ்த்தப்பட்டவனை, எந்தத் தமிழனை விடுதலை செய்யப் போகிறார்கள்? இந்த மறுகாலனியாதிக்க ஆதரவினை ரவிக்குமார்-திருமாவளவனின் தனிப்பட்ட சறுக்கலாகப் பார்த்துவிட முடியாது; பின் நவீனத்துவ அறிஞர்களால் போற்றப்படும் தலித் அரசியலின் உண்மை முகமே இதுதான்.

● செல்வம்

www.padippakam.com

## நக்சல்பாரி பேரெழுச்சியின் 40-ஆம் ஆண்டு:

# மறையாது மடியாது நக்சல்பாரி! மரணத்தை வென்று எழும் நக்சல்பாரி!

நக்சல்பாரி — அது இமயமலையின் அடிவாரத்திலுள்ள ஒரு சிறு கிராமத்தின் பெயர். மேற்கு வங்க மாநிலம், டார்ஜிலிங் மாவட்டம், சிலிகுரி வட்டத்திலுள்ளது அந்தக் கிராமம். பண்ணை நிலப்பிரபுக்கள், கந்துவட்டிக்காரர்கள், அரசு அதிகார வர்க்கத்தினர், போலீசு ஆகியோரின் சுரண்டல் - ஒடுக்குமுறைக் கொடுமைகளை மௌனமாக அனுபவித்துக் கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான இந்தியக் கிராமங்களில் ஒன்றாகத்தான் நாற்பதாண்டுகளுக்கு முன்பு அந்தக் கிராமம் இருந்தது.

1967-ஆம் ஆண்டு மே 23-ஆம் தேதிக்குப் பின்னரோ, அது கோடானுகோடி உழைக்கும் மக்களின் இலட்சியக் கனவு. நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் நிலம் கிடைக்குமென்று அரசு அதிகார வர்க்கத்தை அண்டிக் காத்துக் கிடப்பதா, அல்லது ஆயுதம் ஏந்திப் போராடி நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்வதா என்ற கேள்விக்கு விவ்சாயிகள் அங்கே விடை கண்டனர்.

அதுதான் நக்சல்பாரி உழவர்களின் ஆயுதம் தாங்கிய பேரெழுச்சி. சி.பி.எம். கட்சிக்குள்ளிருந்த கம்யூனிசப் புரட்சியாளர்களால் வழிநடத்தப்பட்ட எழுச்சி. மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடித்த மாபெரும் எழுச்சி. ''துப்பாக்கிக் குழாயிலிருந்து அரசியலதிகாரம் பிறக்கிறது'' என்று முழங்கிய எழுச்சி.

சிலிகுரி வட்டத்தின் ஆயிரக்கணக்கான விவசாயிகள் கிராமக் கமிட்டிகளை நிறுவி ஆயுதம் ஏந்திப் போராடினார்கள், தங்கள் கூலிக்காக மட்டும் போராடும் தொழிற்சங்கவாதத்தைக் கைவிட்டு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும் அவர்களோடு இணைந்து ஆயுதம் ஏந்திப் போராடினார்கள்.

நிலப்பிரபுக்களின் பட்டாக்களும் கடன் பத்திரங்களும் தீயிட்டு எரிக்கப்பட்டன. வில்லும் அம்பும் துப்பாக்கியும் ஏந்திய விவசாயிகள் அதிகாரத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டனர். மக்கள் நீதிமன்றம் அமைத்து, எதிரிகளைக் கூண்டிலேற்றி விசாரித்துத் தண்டனை வழங்கினர். சாட்டைகள் முதன்முறையாகக் கொழுத்த சதைகளைச் சுவைத்தன. கொடிய நிலப்பிரபுக்களுக்கு அங்கே மரணதண்டனை விதிக்கப்பட்டது.

அறுவடை செய்யப்பட்ட தானியங்கள் போகவேண்டிய இடத்திற்கு - கூலி, ஏழை உழவர்களின் குடிசைக்கு - முதன்முறையாகப் போய்ச் சேர்ந்தன. குத்தகை விவசாயிகளின் அனுபோக உரிமை நிலைநாட்டப்பட்டது. வயல்களெங்கும் படபடத்துக் கொண்டிருந்த செங்கொடிகள் நிலப்பிரபுக்களை எள்ளி நகையாடின.

1967 மார்ச் மாதத்திலிருந்து படிப்படியாக முன்னேறிய நக்சல்பாரி எழுச்சியைக் கண்டு ''ஐயோ, பயங்கரவாதம்!'' என்று ஆளும் வர்க்கங்கள் அலறின. மே 23-ஆம் நாளன்று தங்களது தலைவர்களைக் கைது செய்ய வந்த போலீசு படையை நக்சல்பாரி விவசாயிகள் திருப்பித் தாக்கி விரட்டினர். பின்னர் பெரும்படையுடன் வந்து நரவேட்டையாடியது போலீசு. இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்ட போதும் நக்சல்பாரி தன் நிறத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

நக்சல்பாரி - வெறுமனே நிலத்திற்கான போராட்டமல்ல; அரசியல் அதிகாரத்திற்கான போராட்டம். ''உழுபவனுக்கே நிலம்; உழைப்பவருக்கே அதிகாரம்!'' நக்சல்பாரி எழுப்பிய இந்த மந்திரச் சொற்கள் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை எதிரொலித்தன. முஷாகரி, கோபிவல்லபூர், லக்கிம்பூர் கேரி, சிறீகாகுளம், தெலிங்கானா, கேரளா, தமிழ்நாடு... என நாடெங்கிலும் வர்க்கப் போராட்டம் காட்டுத் தீயாகப் பற்றிப் படர்ந்தது.

''வேலை நிறுத்தம் செய்தால் ஆலையை மூடிக் கதவடைப்பு செய்

உழவர் புரட்சியை முன்னெடுத்து செல்ல உறுதியேற்கும் நக்சல்பாரி புரட்சியாளர்கள்.



www.padippakam.com

வோம்'' என்று மிரட்டிய ஆலை முதலாளிகளை அவர்களது அறைக்குள்ளேயே கதவடைப்பு செய்து முற்றுகையிட்டார்கள் தொழிலாளர்கள். நக்சல்பாரி தொழிற்சங்கங்களின் போர்க்குணமிக்க போராட்ட வடிவமாக ''கெரோ'' எனும் முற்றுகைப் போராட்டம் நாடெங்கும் பரவியது. நாடெங்கும் மாணவர்கள் கல்வியை - கல்லூரியைத் துறந்து நக்சல்பாரி இயக்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்டனர். விவசாயிகளை அரசியல் உணர்வூட்டி அணிதிரட்ட கிராமங்களை நோக்கிச் சென்றனர்.

போராட்டங்களைக் கட்டியமைத்து வழிநடத்திய 'குற்றத்திற்காக' கைது செய்யப்பட்ட புரட்சியாளர்கள் குற்றுயிரும் கொலையுயிருமாக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார்கள். ''ஆம்! நாங்கள்தான் பண்ணையாளர்களைக் கொன்றோம். மக்கள் எதிரிகளை அழித்தொழித்தோம். தூக்கு தண்டனையா, அதற்கு நாங்கள் அஞ்சவில்லை. தீர்ப்பை எழுதிவிட்டு ஏன் விசாரணை நாடகமாடுகிறாய்?'' என்று கலகக் குரல் எழுப்பினார்கள். நீதிமன்றங்களின் புனிதம், நாடாளுமன்ற - சட்டமன்றங்களின் மீதான மாயை, போலீசின் மீதான அச்சம் அனைத்தையும் ஒரே அடியில் தகர்த்தெறிந்தது நக்சல்பாரி.

தகர்ந்தவை ஆளும் வர்க்க நிறுவனங்கள் மட்டுமல்ல; நாற்காலி புரட்சி செய்யும் இடது, வலது போலி கம்யூனிஸ்டுக் கட்சிகளும்தான். நக்சல்பாரி பேரெழுச்சியை ஆதரித்தும், அதை ஒடுக்கி அவதூறு செய்த சி.பி.எம். கட்சியின் துரோகத்தையும் புரட்டல்வாதத்தையும் நிராகரித்தும் நாடெங்கும் கம்யூனிசப் புரட்சியாளர்கள் ஒருங்கிணைந்தனர். மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையே எங்களின் சித்தாந்தம்; தரகு அதிகார முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியம் ஆகியவற்றைத் தகர்த்தெறிந்து புதிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிப்பதே எங்களது உடனடி இலட்சியம்; போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்; ஆயுதப் போராட்டப் பாதையில் மக்கள் யுத்தத்திற்கு அணிதிரள்வோம் - எனத் தமது கொள்கைகளைப் பிரகடனம் செய்த புரட்சியாளர்கள், இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) என்ற புரட்சிகரக் கட்சியை லெனினது நூற்றாண்டு தினத்தில் - 1969 ஏப்ரல் 22-ஆம் நாளில் தோற்றுவித்தனர். அது, நக்சல்பாரி பேரெழுச்சி ஈன்றெடுத்த போராளி;



**நக்சல்பாரி என்ற சொல் இனி மே.வங்கத்திலுள்ள சிறு கிராமத்தை மட்டும் குறிக்கவில்லை. அது, உலகப்புரட்சி வரலாற்றில் அழிக்க முடியாத இடத்தைப் பெற்றிருக்கிறது. அது, ஒரு மாபெரும் அரசியல் இயக்கத்தை, ஒரு ஆயுதந்தாங்கிய பேரெழுச்சியைக் குறிக்கிறது. உழைக்கும் மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரே பாதையாக விளங்குகிறது.**

**2007** - நக்சல்பாரி எழுச்சியின் நாற்பதாம் ஆண்டு. கடந்த 40 ஆண்டுகளில் நக்சல்பாரி இயக்கம் கற்றுக் கொண்டதும் சாதித்திருப்பதும் ஏராளம். அளவில் மட்டுமல்ல, அதன் முதிர்ச்சியும் அரசியல் செல்வாக்கும் பெருகியிருக்கிறது. நக்சல்பாரி என்ற சொல் இனி மே.வங்கத்திலுள்ள சிறு கிராமத்தை மட்டும் குறிக்கவில்லை. அது, உலகப்புரட்சி வரலாற்றில் அழிக்க முடியாத இடத்தைப் பெற்றிருக்கிறது. அது, ஒரு மாபெரும் அரசியல் இயக்கத்தைக் குறிக்கிறது; ஒரு ஆயுதந்தாங்கிய பேரெழுச்சியைக் குறிக்கிறது; நாடாளுமன்ற போலி ஜனநாயகத்துக்கு வெளியே உழைக்கும் மக்கள் அணிதிரளும் அரசியல் மையமாகத் திகழ்கிறது; அதிகாரவர்க்க - இராணுவ அரசியலமைப்பைத் தாக்கித் தகர்ப்பதற்கான போராயுதமாக எழுகிறது; உழைக்கும் மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரே பாதையாக விளங்குகிறது.

1970-களில் கல்கத்தா வீதிகளில் ஆயிரக்கணக்கான புரட்சிகர இளைஞர்களைச் சுட்டுக் கொன்ற சித்தார்த்த சங்கர் ரே; அதன் பிறகு, கிராமங்கள் - நகரங்கள்-சிறைச்சாலைகளிலும் புரட்சியாளர்களின் ரத்தம் குடித்த பாசிசக் காளி இந்திரா, 80-களில் தருமபுரி - வடஆற்காடு மாவட்டங்களில் புரட்சியாளர்களை நரவேட்டையாடிய பாசிச எம்.ஜி.ஆர். - தேவாரம் கும்பல், ஆந்திராவில் வெங்கல்ராவ், சென்னாரெட்டி, என்.டி.ஆர்., சந்திராபாபு நாயுடு என கொலைவெறியாட்டம் போட்ட ஆட்சியாளர்கள்... ''ஒழித்து விட்டோம்'' என எதிரிகள் ஒவ்வொருமுறை மார்தட்டும் போதும், ''எழுந்து விட்டோம்'' என அவர்களது நெற்றிப் பொட்டில் தன் துப்பாக்கியை அழுத்துகிறது நக்சல்பாரி.

இன்று தனியார்மயம், தாராளமயம், உலகமயம் எனத் தொடரும் மறுகாலனியாக்கத்துக்கு எல்லா ஓட்டுக் கட்சிகளும் ஓரணியில் நின்று தமது எசமானர்களான ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாசமாகச் சேவை செய்கின்றன. 70-களில் நிலவிய கொள்கை வேறுபாடுகளோ அரசியல் குழப்பங்களோ இப்போது இல்லை. இடது, வலது போலி கம்யூனிஸ்டுகளும் தங்களது ஆடைகளைக் களைந்துவிட்டு அம்மணமாக நிற்கிறார்கள். இருப்பது இரண்டே முகாம்கள்தான். ஒன்று; ஆளும் வர்க்கங்கள்-ஓட்டுக் கட்சிகளின் விரிந்த ஐக்கிய முன்னணி; மற்றொன்று, நக்சல்பாரி புரட்சியாளர்களின் தலைமையிலான உழைக்கும் மக்களின் புரட்சிப் போரணி.

அளப்பரிய தியாகத்தால் சிவந்து ஒளிரும் நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தைத் தோற்கடிக்கவோ மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவோ ஒருக்காலும் முடியாது. நாடாளுமன்றப் பாதைக்கு வெளியே, ஆக்கப்பூர்வமான அரசியல்-பொருளாதாரத் தீர்வை முன்வைத்து, நாட்டையும் மக்களையும் விடுதலை செய்யும் மாபெரும் புரட்சிக்குத் தலைமை தாங்கி வழிநடத்தும் தெளிவும் துணிவும் வேறெந்த அரசியல் இயக்கத்திற்கும் கிடையாது.

***மறையாது மடியாது நக்சல்பாரி!***
***மரணத்தை வென்று எழும் நக்சல்பாரி!***

**— ஆசிரியர் குழு**

www.padippakam.com

## பெரியார் புரா:

# தி.க. வீரமணியின் ஏகாதிபத்திய சேவை

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஆவாரம்பட்டி-முத்துவீரகண்டயன் பட்டி கிராம மக்களுக்கு ஒரே ஆச்சரியம்! இக்கிராமத்துக்கு கடந்த ஆண்டு செப்டம்பர் 24-ஆம் தேதியன்று வந்த அரசுத் தலைவர் அப்துல்கலாம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டத்தைத் தொடங்கி வைத்து, அக்குடிநீரில் ஒரு குவளை பருகி கிராம மக்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். வழக்கமாக இதுபோன்ற திட்டங்களை மாநில முதல்வர் அல்லது அமைச்சர் அல்லது மாவட்ட ஆட்சியர்தான் தொடங்கி வைப்பார்கள். ஆனால், அரசுத் தலைவரே முக்கியத்துவமளித்து இத்திட்டத்தைத் தொடங்கி வைப்பதைக் கண்டு வியந்த மக்கள், விழா மேடையைப் பார்த்தார்கள். அங்கே அரசுத் தலைவருடன் தி.க.வின் வீரமணியும் அருகே அமர்ந்திருக்க, இக்குடிநீர் திட்டத்தை ''பெரியார் புரா'' நடத்துவதாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

அது என்ன ''பெரியார் புரா''? நகர்ப்புற வசதிகளை கிராமப்புறங்களுக்கும் அளித்தல் எனும் ஆங்கில பெயர்ச் சுருக்கம்தான் ''புரா''. (Providing Urban amenities in Rural Areas). இதனை தி.க.வின் வீரமணி நடத்திவரும் வல்லத்திலுள்ள பெரியார் - மணியம்மை பொயியற் கல்லூரி நிர்வாகம் செயல்படுத்தி வருவதால் ''பெரியார் புரா'' திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

அரசுத் தலைவர் அப்துல்கலாம் இக்குடிநீர் வழங்கல் திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்கு சில மாதங்கள் முன்பு, ''பெரியார் புரா'' திட்டத்துக்கு நிதியும் தொழில்நுட்ப .உதவியும் அளித்துவரும் அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த பியூர்ஓடெக் நிறுவனத்தின் அதிகாரிகள் பூதலூர் அருகிலுள்ள ஆவாரம்பட்டி மற்றும் அதன் அருகிலுள்ள கிராமங்களைச் சுற்றிப் பார்த்தனர். இக்கிராமங்களில் நிலத்தடி நீரில் புளூரைடு எனும் வேதிப் பொருள் அதிகமாக உள்ளதால், குடிநீருக்காக மக்கள் பல மைல் தூரம் சென்று அவதிப்படுவதை அறிந்து, தாங்களே தண்ணீர் குடத்துடன் நடந்து பார்த்து வேதனையடைந்து, அதைப் புகைப்படம் எடுத்து நாளேடுகளில் வெளியிட்டு, உடனடியாக சுத்திகரிப்பு எந்திரத்தை நிறுவி புளூரைடு இல்லாத குடிநீர் கிடைக்க ஏற்பாடுகளைச் செய்தனர். இதைத் தொடர்ந்து, அரசுத் தலைவர் அப்துல்கலாம் இக்குடிநீர் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.

குடிநீர் வழங்குவதோடு ''பெரியார் புரா'' திட்டம் முடிவடைந்து விடவில்லை. கிராம மக்களுக்கு சுயதொழில் பயிற்சி, மூலிகைச் செடி பயிரிட உதவி, சிறு தொழில் பட்டறை நிறுவ உதவி, இணையதள மையங்கள், காட்டாமணக்கு பயிரிட்டு பயோடீசல் தயாரிக்கப் பயிற்சி என அடுக்கடுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

கல்வி வியாபாரக் கம்பெனி நடத்திவரும் தி.க.வும் வீரமணியும் திடீரென கிராமப்புற சமூக சேவை நடவடிக்கைகளில் இறங்கியிருப்பது ஏன்? அடிப்படைத் தேவைகளை அரசே செய்வதற்குப் பதிலாக, அரசும் வீரமணியின் கல்லூரி நிர்வாகமும் கூட்டுச் சேர்ந்து ''புரா'' என்ற புதிய திட்டத்தின் மூலம் செயல்படுத்துவது ஏன்? இத்திட்டத்திற்கு அமெரிக்க நிறுவனம் நிதியும் தொழில்நுட்ப உதவியும் செய்வது எதற்காக? - என்ற கேள்விகளுடன் ''புரா'' திட்டத்தை ஆராயும்போது அதன் பின்னணியில் மிகப் பெரிய ஏகாதிபத்திய சதித்திட்டம் ஒளிந்திருப்பது தெரிய வந்துள்ளது.

எதற்காக இந்த ''புரா'' திட்டம்? அதன் பின்னணி என்ன?

ராஜீவ் காந்தி அரசால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 73-வது திருத்தமாகக் கொண்டு வரப்பட்ட ''பஞ்சாயத்து ராஜ்'' சட்டம்தான், இன்றைய ''புரா'' திட்டத்தின் தாயும் தந்தையுமாவார். இப்பஞ்சாயத்துராஜ் சட்டமானது, ஏகாதிபத்திய கைக்கூலிகளான தன்னார்வ நிறுவனங்களை (அரசு சாரா நிறுவனங்களை) கிராம நிர்வாகத்துக்கு இழுத்து வந்தது. இச்சட்டத்திற்கு வலுவூட்ட பிறப்பிக்கப்பட்ட இதர அரசாணைகள், இத்தன்னார்வ நிறுவனங்களைச் சட்டரீதியாக பஞ்சாயத்து நிர்வாகத்தில் இணைத்து விட்டது.

இவ்வாறு சட்டபூர்வமாக தன்னார்வ நிறுவனங்களை

பெரியார் புராவின் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் அரசுத் தலைவர் அப்துல் கலாம்.




படிப்பகம்

கிராம நிர்வாகத்துக்குள் நுழைய விட்ட இந்திய அரசு, தனித்தனியாக இயங்கி வந்த ஊராட்சிகளை ஒன்றிணைத்து, அந்த வட்டாரத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் விருப்பங்களுக்கு ஏற்ற வகையில் விவசாய உற்பத்தியை மாற்றியமைத்து, இப்பணிகளை ஒருங்கிணைப்பதற்காக உருவாக்கப்பட்டதே ''புரா''

கிராமப்புறங்களில் மகளிர் மற்றும் ஆண்கள் சுய உதவிக் குழுக்களைக் கட்டியமைப்பது, சமூக சேவையிலிருந்து தொடங்கி பின்னர் அக்குழுக்களின் செயல்பாடுகளை ஏகாதிபத்திய சேவையாக மாற்றி விடுவது என்பதுதான் இந்தியா, இலங்கை, வங்கதேசம் போன்ற ஏழை நாடுகளில் ஏகாதிபத்தியங்கள் வகுத்துக் கொண்டுள்ள புதிய உத்தி.

இப்புதிய உத்தியும் செயல்பாடுகளும் இப்போது அடுத்த கட்டத்தை நோக்கிப் பாயத் தொடங்கியுள்ளது. இந்தியாவிலுள்ள தன்னார்வ நிறுவனங்களுடன் தனியார் பல்கலைக் கழகங்கள், கம்பெனிகள் ஆகியவற்றையும் அரசின் சில துறைகளையும் ஒருங்கிணைத்து ஏகாதிபத்திய வல்லரசுகளின் நிதியுதவியோடு கிராமப்புறங்களை ஒரு வட்டார அளவுக்கு சுயநிர்வாகப் பிரதேசங்களாக மாற்றுவது; அப்பிராந்தியத்தில் பாரம்பரிய விவசாயத்தை ஒழித்துக் கட்டிவிட்டு ஏகாதிபத்திய தேவைக்கேற்ற ஏற்றுமதி சார்ந்த விவசாயம் மற்றும் கைவினைப் பொருட்களின் உற்பத்தி மண்டலமாக மாற்றுவது என்ற திட்டத்துடன் ஏகாதிபத்தியவாதிகளும் இந்திய ஆட்சியாளர்களும் களமிறங்கியுள்ளனர். இத்திட்டத்திற்காக சமூக சேவை என்ற முகமூடியுடன் உருவாக்கப்பட்டிருப்பது தான் ''புரா''

நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்றிரண்டு ''புரா'' மண்டலங்கள் அமைய உள்ளன. இப்''புரா'' அமைப்பின் கீழ் அவ்வட்டாரத்தில் பல வகையான தன்னார்வக் குழுக்கள் செயல்படும். கிராமப்புற மக்களின் விவசாயம், கைவினைத் தொழில், சுகாதாரம், சுற்றுச்சூழல், அடிக்கட்டுமானம், கல்வி, மகளிர் நலம் முதலான அனைத்தையும் இத்தன்னார்வக் குழுக்கள் மேற்பார்வையிட்டு வழி காட்டி நெறிப்படுத்தும். சுருக்கமாகச் சொன்னால், கிராமப்புறங்களில் தன்னார்வக் குழுக்களின் ஆட்சியை நிறுவுவதற்கான துவக்கப் புள்ளிதான் ''புரா''.

கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், நிதிநிறுவனங்கள், சமூக இயக்கங்கள், அரசு நிறுவனங்கள் ஆகியன தனியாகவோ கூட்டு சேர்ந்தோ ''புரா'' மண்டலங்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். இவை, இப்பகுதியிலுள்ள பஞ்சாயத்துராஜ் அமைப்பைக் கலந்தாலோசித்து திட்டத்தை முன்வைத்து அனுமதி பெறலாம். இத்திட்டத்திற்காக தனிச்சிறப்பான தொழில்நுட்பம் அல்லது உரிய உற்பத்தி முறையை முடிவு செய்து அரசே அதற்குத் தேவையான நிலம் அளிக்கும். பின்னர், ஏகாதிபத்திய நிறுவனங்கள் மற்றும் ஏகபோக முதலாளிகளிடமிருந்து நிதியாதாரம் திரட்டப்பட்டு ''புரா'' செயல்படத் தொடங்கும். ''புரா''வுக்கு இசைவாக, அரசின் பிற திட்டங்களது நிதியும் அவசியம் கருதி ''புரா''வுக்குத் திருப்பப்படும். இவ்வாறாக, போலீசு, நீதித்துறை தவிர பிற அனைத்து அதிகாரங்களையும் ஏகாதிபத்திய ஏஜெண்டுகளான தன்னார்வக் குழுக்களின் கைகளில் ஒப்படைத்து தனி சுயாட்சி பிராந்தியங்களை நிறுவுவதுதான் ''புரா'' திட்டம்.

காலனிய ஆட்சிக் காலத்தில் விக்டோரியா மகாராணியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் பிரிட்டிஷ் இந்தியா என்றும், பெயரளவுக்கு அதிகாரம் கொண்ட 526 சரிகைக் குல்லா மன்னர்களின் குட்டி சமஸ்தானங்களுமாக அன்றைய இந்தியா இருந்தது. இன்று மறுகாலனியாக்கத்தின் கீழ், விக்டோரியா மகாராணிக்குப் பதிலாக, பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் வரம்பற்ற அதிகாரம் கொண்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்களும், குட்டி சமஸ்தானங்களுக்குப் பதிலாக ''புரா'' மண்டலங்களும் உருவாகியுள்ளன.

# ஒரே புற்று; இரண்டு பாம்புகள்!

**கொ**ள்கையில் கீரியும் பாம்பும் போலத் தோற்றமளிக்கும் திராவிடர் கழகமும் இந்துவெறி ஆர்.எஸ்.எஸ்.-ம் ''புரா'' திட்டம் மூலம் ஏகாதிபத்தியங்களுக்குச் சேவை செய்வதில் புதிய பங்காளிகளாகியுள்ளன. மத்தியப் பிரதேசத்திலுள்ள தீனதயாள் ஆய்வு மையம் எனும் ஆர்.எஸ்.எஸ். நிறுவனம் நடத்தி வரும் ''புரா'' திட்டம்தான் இந்தியாவின் முன்னோடித் திட்டம். இதனையடுத்துதான் வீரமணியின் ''பெரியார் புரா'' திட்டம் தொடங்கப்பட்டது. ''சித்ரகூடம் புரா'' எனப்படும் ஆர்.எஸ்.எஸ். நடத்தும் ''புரா'' திட்டம் பழத்தோட்டம், மூலிகைப் பண்ணை, பழங்குடியினர் மேம்பாடு, பசு பாதுகாப்பு - என பல அரங்குகளிலும் நுழைந்து 100 மண்டலங்களில் காலூன்றியுள்ளது. பார்ப்பனியத்துடன் ஏகாதிபத்திய சேவையை விசுவாசமாகச் செய்துவரும் ''அம்பி''கள் இப்போது ''பெரியார் புரா''வின் சேவையைப் பாராட்டி ஊடகங்களில் எழுதி வருகின்றனர்.

நகர்ப்புறங்கள் சுண்டி இழுக்கும் கவர்ச்சியால் கிராமப்புற இளைஞர்கள் நகரங்களை நோக்கி இடம் பெயர்கின்றனர் என்றும் இதனால் ஏற்படும் விபரீத விளைவுகளை உணர்த்தி இந்த இடப்பெயர்ச்சியைத் தடுத்து நிறுத்தவே ''புரா'' திட்டத்தை செயல்படுத்தி வருவதாக ஆர்.எஸ்.எஸ்.-இன் ''சித்ரகூடம் புரா'' கூறுகிறது. ஏகாதிபத்திய அடியாள் வேலையை மறைத்து இந்து வெறியர்கள் இப்படியொரு காரணத்தை அவிழ்த்து விட்டுள்ளபோது, 'தளபதி' வீரமணியின் ''பெரியார் புரா'' வேறொரு காரணத்தைச் சொல்கிறது.

1944-ஆம் ஆண்டு கிராம முன்சீப்கள் பயிற்சி மைய விழாவில் பேசிய பெரியார், ''நகரத்தில் கிடைக்கும் அத்தனை வசதிகளும் கிராமத்திலும் கிடைக்கச் செய்யவேண்டும்'' என்று குறிப்பிட்டாராம். எனவேதான், பெரியார் கொள்கை வழியில் ''புரா'' திட்டத்தைத் தொடங்கி கிராம மக்களுக்கு நகர்ப்புற வசதிகள் அனைத்தும் கிடைக்கச் செய்ய வீரமணி கும்பல் பாடுபடுகிறதாம்! இதே பாணியில், பெரியாரின் பேச்சுகள் - எழுத்துக்களிலிருந்து இன்னும் பல புதிய காரணங்களை வீரமணி கும்பல் கண்டுபிடித்து, அவிழ்த்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

''புரா'' திட்டத்தைச் சாதகமாக்கிக் கொண்டு, ஏகாதிபத்திய சேவையுடன் ''கோமாதா பாதுகாப்பு'' எனும் கொள்கையை செயல்திட்டமாக வைத்து ஆர்.எஸ்.எஸ்.-இன் சித்ரகூடம் புரா இயங்கி வருகிறது. ஆனால், பெரியார் பெயரை வைத்து பிழைப்பு நடத்தும் வீரமணி கும்பலின் பெரியார் புரா திட்டத்தில், ஏகாதிபத்திய அடியாள் வேலையைத் தவிர, பெயரளவுக்குக்கூட பெரியாரின் கொள்கையோ வெங்காயமோ இல்லை.

www.padippakam.com

பகுத்தறிவு பாசறையி லிருந்து வந்த தி.க.வின் வீர மணி, தான் நடத்தி வரும் வல்லம் பெரியார்-மணி யம்மை பொறியியற் கல் லூரி எனும் கம்பெனி மூலம் மூன்றாண்டுகளுக்கு முன்பு ''புரா'' திட்டத்தைத் தொடங்கி, அதற்குப் ''பெரி யார் புரா'' என்று பெயரிட் டுள்ளார். பெரியாரின் பெயரால் ''புரா'' திட்டம் தொடங்கப்பட்டுள்ளதால், இது சமூக சேவையுடன் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்யப் போகிறது என்று நீங்கள் கருதினால், அதை விட ஏமாளித்தனம் இருக்க முடியாது. பெயரில் மட்டும் தான் பெரியார் இருக்கி றாரே தவிர, ''பெரியார் புரா'' செய்து வருவது ஏகாதிபத்திய அடியாள் வேலைதான்!



அன்று அவுரிப் பயிரிடச் சொன்னான் வெள்ளைக்காரன்;
இன்று காட்டாமணக்கைப் பயிரிட வைக்கிறது, பெரியார் புரா.

தஞ்சை மாவட்டமும் அதை ஒட்டி யுள்ள புதுக்கோட்டை மாவட்டமும் ''பெரியார் புரா'' திட்டத்துக்கென இனங்காணப்பட்டு, செங்கிப்பட்டி, பூதலூர் உள்ளிட்ட 65 கிராமங்கள் இத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட் டுள்ளன. ''புரா'' கிராமங்களிலுள்ள பலநூறு சுய உதவிக் குழுக்களுக்கு பால் பண்ணை நடத்துவது, உயிர்ம வாயுவிலிருந்து மின்சாரம் தயாரிப் பது, கக்கூசுக்கான பீங்கான் செய்வது, மண்புழு உரம் தயாரிப்பது, தரிசு நில மேலாண்மை, சூரிய ஒளி ஆற்றலைப் பயன்படுத்துவது முதலானவற்றில் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இப்பகுதி யில் ''வேன்''கள் மூலம் நடமாடும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட் டுள்ளன. வெண்டையம்பட்டி, ஆவா ரம்பட்டி, திருமலை சமுத்திரம், குரும் பூண்டி, வளம்பக்குடி, ஆச்சாம்பட்டி ஆகிய கிராமங்களில் இணையதள மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. வல்லம் கல்லூரி வாயிலாக அளிக்கப் பட்டுள்ள பயிற்சியைக் கொண்டு எரி பொருளுக்காக காட்டாமணக்கு செடி யும், மருந்து மற்றும் சாய உற்பத்திக் காக அவுரியும், கத்தாழையும் பயிரி டப் போகின்றனர், ''பெரியார் புரா'' கிராமத்தினர். தேங்காய் நாரிலிருந்து கைவினைப் பொருட்கள் தயாரிப்பதை அச்சம்பட்டி கிராமமும், மூங்கில் கைவினைப் பொருட்கள் தயாரிப்பை குமாரபுரம் கிராமமும், மூலிகைச் செடி பயிரிடுவதை பழையபட்டி கிராமமும், பால் பொருட்கள் உற்பத்தியை ராய முண்டன்பட்டி கிராமமும், சுடுமண் பொம்மைகள்-பானைகள் தயாரிப் பதை மனையேறிப்பட்டி கிராமமும், பித்தளைப் பொருட்கள் உற்பத்தியை நாச்சியார்கோயில் கிராமமும் ஒருங்கி ணைக்கும் மையங்களாக மாறப் போகின்றன.

''பெரியார் புரா''வின் துணை அமைப்பான (தி.க.வால் நடத்தப்ப டும்) ''பவர்'' நிறுவனம், ஒரத்தநாடு, பூதலூர், தஞ்சை, திருவாணம் பகுதிக ளில் நூற்றுக்கணக்கான மகளிர் - ஆட வர் சுயஉதவிக் குழுக்களைக் கட்டி நிதிக்கடன் வசதியையும் ஏற்படுத்தி யுள்ளது. ரூ. 1.3 கோடியை சுழற்சி மூல தனமாகக் கொண்ட இத்தன்னார்வ நிறு வனம் தெக்கூரிலும் மனையேறிப் பட் டியிலும் மட்பாண்டங்களைச் செய்ய பயிற்சி அளித்து வருகிறது. களிமண் ணால் செய்யப்படும் கைவினைப் பொருட்கள், சணல் பைகள், தரைவி ரிப்புகள் தயாரிப்பு, உள்கூடான செங் கல் தயாரிப்பு ஆகியவற்றை ஏற்றுமதி செய்யும் மையமாக தெக்கூர் மண்ட லம் செயல்படத் தொடங்கியுள்ளது. காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயா ரிப்பு, ஸ்கிரீன் பிரிண்டிங் அட்டைகள், வற்றல், ஊறுகாய் தயாரிப்பு ஆகிய வற்றை மகளிர் சுய உதவிக் குழுக்க ளுக்குப் பயிற்சியளித்து இப்பொருட் களை ஏற்றுமதி செய்யும் மையமாக ஒரத்த நாடு மற்றும் வல்லம் மண்டலங் கள் செயல்படவுள்ளன.

சுருக்கமாகச் சொன்னால், தாராளம யத்தால் விவசாயம் திவாலாகி, விவசா யத்தை விட்டே விவசாயிகள் விரட்டப் பட்டு வரும் நிலையில், விவசாயிக ளின் அதிருப்தியும் கோபமும் ஆட்சி யாளர்களுக்கு எதிரான கலகமாக மாறி விடுவதைத் தடுத்து சாந்தப்படுத்தி, மாற்றுப் பயிர் - மாற்றுத் தொழில் என்ற பெயரில் வடிகால் வெட்டி, அவற்றை ஏகாதிபத்திய சேவையாக மாற்றி விடுவ தற்கான ஏற்பாடுகளே இவை. இதற்காகவே ''பெரியார் புரா'' கிராமப் பள்ளிக் குழந்தைகளை வைத்து நாட்டு நலத் திட்ட முகாம் என்ற பெயரில் மூளைச் சலவையையும், வல்லம் பொறியியற் கல் லூரி மாணவர்கள் மூலம் கத்தாழையும் காட்டாம ணக்கும் பயிரிடச் சொல் லும் பிரச்சாரத்தையும் முடுக்கி விட்டுள்ளார் வீர மணி. இதுவும் போதா தென்று, தன்னார்வக் குழுக் கள் பண்பலை ஒலிபரப் பைத் தொடங்க இந்திய அரசு அனுமதித்துள்ளதைச் சாதகமாக் கிக் கொண்டு, ''பெரியார் புரா'' மூலம் சமுதாய வானொலி எனும் பண்பலை ஒலிபரப்பையும் தொடங்கியுள்ளார்.

அப்படியானால் யார் நெல் பயிரிடு வது? ''உலகச் சந்தையில் நெல்லும் கோதுமையும் 'மலிவான' விலைக்குக் கிடைக்கும் போது, நாம் ஏன் அவற் றைப் பயிரிட்டு நட்டப்பட வேண்டும்? நாம் கள்ளியும் கத்தாழையும் காட்டாம ணக்கும் பயிரிட்டு ஏற்றுமதி செய் வோம்; அதற்கீடாக நெல்லையும் கோதுமையையும் இறக்குமதி செய்து கொள்வோம்'' என்கிறார்கள், ''புரா'' நிர்வாகத்தை நெறிப்படுத்தும் ''ஜெட்ரோ'' எனும் ஜப்பானிய நிறுவ னத்தின் அதிகாரிகள்.

ஏழை நாடுகளின் உணவுச் சந்தை யைக் கைப்பற்றிக் கொண்டு ஆதிக்கம் செலுத்த ஏகாதிபத்திய வல்லரசுகளின் உணவு வர்த்தக நிறுவனங்கள் நீண்ட காலமாக முயற்சித்து வருகின்றன. உணவு தானியங்களை ஏழை நாடுக ளில் இறக்குமதி செய்து ஆதிக்கம் செய் வதில் அவை குறியாக இருக்கின்றன. எனவேதான் ''உணவு உற்பத்தியைக் குறை; மானியங்களை நிறுத்து'' என்று உத்தர விடுகிறது உலக வங்கி. 'மலி வான' விலையில் ஏகாதிபத்திய நாடுக ளிலிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்து கொள்ளுமாறும், உணவு பாதுகாப்பு ஏற்பாடுகளையும் பெயரளவிலான சுயசார்பையும் கைவி டுமாறும் பன்னாட்டு ஏகபோக கம்பெ னிகள் ஏழை நாடுகளை நிர்ப்பந்திக்கின் றன. எனவேதான் ''கோதுமையையும் நெல்லையும் விட்டுத் தொலையுங்கள்; தோட்டப் பயிர், மலர்ப்பண்ணை போன்று நல்ல ஏற்றுமதி வாய்ப்புள்ள


படிப்பகம்

www.padippakam.com

உற்பத்திக்கு மாறுங்கள்'' என்று 2001-ஆம் ஆண்டிலேயே அரியானா விவசாயிகளுக்கு உபதேசித்தார் அன்றைய பா.ஜ.க. பிரதமர் வாஜ்பாய். இப்போது ''பெரியார் புரா'' திட்டத்தின் மூலம் இதனைச் செயல்படுத்தி, ஏகாதிபத்திய சேவையில் ஓட்டுக் கட்சிகளையெல்லாம் விஞ்சி முன்னணியில் நிற்கிறார் 'தளபதி' வீரமணி.



நல்ல குடிதண்ணீருக்காக அலையும் பூதலூர் கிராம மக்களின் சுமையைப் 'பகிர்ந்து' கொள்ளும் பியூர்ஓடெக் நிறுவன அதிகாரி.

வீரமணியின் ''பெரியார் புரா'' நிர்வாகத்தை நெறிப்படுத்தும் தலைமைக் குருபீடமான ஜப்பானிய முதலாளிகளது ''ஜெட்ரோ'' நிறுவனத்தின் இயக்குநர் கவர்ச்சிகரமான முறையில் ஒரு தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரித்துள்ளார். ''ஒரு கிராமம்; ஓர் உற்பத்திப் பொருள்'' என்பதுதான் அத்திட்டத்தின் பெயர். இதன்படி ''புரா'' மண்டலத்திலுள்ள ஒரு கிராமத்தில் கத்தாழை பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும்; மற்றொரு கிராமத்தில் காட்டாமணக்கு பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும்; இன்னொரு கிராமத்தில் கைவினைப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும். இக்கிராம மக்களுக்கு இதற்கான பயிற்சியளித்து, உற்பத்தி செய்து, அவற்றை ஏற்றுமதி செய்வதை ''புரா'' அமைப்பினர் கண்காணித்து வழிகாட்டுவர்.

கடந்த பிப்ரவரி 2007-இல் டெல்லியில் ''ஜெட்ரோ'' நிறுவனம் நடத்திய கண்காட்சியில் கலந்து கொண்ட ''பெரியார் புரா''வின் தயாரிப்புகளில், 40 பொருட்கள் இந்நிறுவனத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இப்பொருட்களின் மாதிரிகள் வரும் ஜூலையில் ஜப்பானுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அவற்றில் தேவைப்படும் மாற்றங்களைக் கேட்டு வந்து, அதன்படி ''பெரியார் புரா'' மண்டலத்திலுள்ள கைவினைஞர்களுக்கு வேலை கொடுத்து, அப்பொருட்களை ஏற்றுமதி செய்து, கிராமப்புற கைவினைஞர்களுக்கு வாழ்வளிக்கப் போவதாக ''பெரியார் புரா'' அறிவித்துள்ளது.

சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகம், இந்திய விண்வெளித் துறை ஆகிய மைய அரசின் நிறுவனங்களோடு, கனடா நாட்டின் வட அட்லாண்டிக் கல்லூரி, அமெரிக்காவின் சான்டியாகோ பல்கலைக் கழகம், இல்லினாய்ஸ் தொழில்நுட்பக் கழகம், அமெரிக்க - ஜப்பானிய ஏகபோக கம்பெனிகள் ஆகியவற்றின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் ''பெரியார் புரா'' கிராமங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வட்டாரத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் ''புரா'' நிர்வாகிகள் திட்டப் பரிசீலனைக் கூட்டங்களை நடத்த ஆரம்பித்துள்ளனர். இவ்வாறாக, தஞ்சை - புதுக்கோட்டை மாவட்டங்களின் குக்கிராமங்கள் அன்னிய மூலதனத்துடன் பிணைக்கப்பட்டு அதன் அடியாளாகச் செயல்படும் ''பெரியார் புரா''விடம் கிராமப்புற உற்பத்தியும் நிர்வாகமும் மாற்றப்பட்டு வருகிறது.

தி.க.வின் வீரமணி இப்போதெல்லாம் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வதில்லை. அதற்கு மாறாக, தன்னார்வக் குழுக்களுக்காகவும் ''புரா'' கிராமங்களுக்காகவும் ''வாழ்வியல் சிந்தனைகள்'' எனும் பெயரில் சுயமுன்னேற்றக் கட்டுரைகளை எழுதத் தொடங்கி விட்டார். பெருந்தொழில் நிறுவனங்களில் மேலாண்மை செய்யும் நிர்வாகிகளுக்குக் கற்றுத் தரப்படும் விதிமுறைகளையே தேனில் குழைத்துத் தரும் வேலையை வீரமணி செய்து வருகிறார். ''வேலை வெட்டியின்றி இருக்கும் இளைஞர்கள் சுய தொழில் செய்ய முனைய வேண்டும்,'' ''இருப்பதை வைத்து சிறப்புடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்'', ''மேலை நாட்டினர் நம் அருகில் உள்ளபோது நாம் தாய்மொழியில் பேசிக் கொள்வது, அவர்களது மனதப் புண்படுத்தும்'' என்றெல்லாம் தனது அடிமைத்தனத்தையே 'உரை நடைத் திருக்குறளாக' (வாழ்வியல் சிந்தனைகள் நூலுக்கான விளம்பர வாசகம்) எழுதித் தள்ளுகிறார்.

வீரமணி புதிய நூல் எழுதுவது சுய விளம்பரத்திற்கல்ல; அது ஏகாதிபத்திய சேவையின் புதிய அத்தியாயம். ''பெரியார் புரா'' திட்டம் என்பது வெறுமனே சமூக சேவைக்கும் கைவினைப் பொருள் ஏற்றுமதிக்குமானதல்ல; அது விவசாயிகளை விவசாயத்திலிருந்தே விரட்டியடித்து, நாட்டையும் மக்களையும் அடிமைப்படுத்தக் கிளம்பியுள்ள ஏகாதிபத்திய சதியின் ஓர் அங்கம். உணவு தானிய உற்பத்தியை ஒழித்து, ஒற்றைப் பயிர்முறைக்கு விவசாயம் மாற்றப்பட்டால் பேரழிவுகளே விளையும். ''புரா'' திட்டப்படி, ஒரு ஊர் முழுக்க அவுரிச் செடியும் மற்றொரு ஊர் முழுக்க காட்டாமணக்கும் பயிரிடப்பட்டால் உயிர்மப் பன்மம் பாழாகி நிலம் மலடாகிப் போகும். சுற்றுச்சூழல் நாசமாகி இயற்கையின் முறைகுலைவுகள் ஏற்படும். அதன்பிறகு, இன்னுமொரு சோமாலியா, எத்தியாப்பியாவாக இந்தியா மாறிப் போகும்.

ஏகாதிபத்திய வல்லரசுகள் புதிய நுட்பமான வழிமுறைகளைக் கொண்டு மீண்டும் காலனியாதிக்கத்தை நிறுவ முயற்சித்து வருகின்றன. இதர தன்னார்வக் குழுக்களையும் ஓட்சிக் கட்சிகளையும் வியப்பில் ஆழ்த்தும் அளவுக்கு ''பெரியார் புரா'' திட்டத்தின் மூலம் ஏகாதிபத்திய அடியாள் வேலையில் முன்னணியில் நிற்கிறார் 'தளபதி' வீரமணி. ஏகாதிபத்தியங்களின் நூதன வடிவிலான காலனியாதிக்கத்துக்கும், பெரியார் பெயரைச் சொல்லி பிழைப்பு நடத்தும் நவீன எட்டப்பர்களுக்கும் எதிராக, உழைக்கும் மக்களை காலனியாதிக்க எதிர்ப்புப் போருக்கு அணிதிரட்டுவதே இன்று நம் முன் அவசர அவசியக் கடமையாக உள்ளது.

• இரணியன்


படிப்பகம்

www.padippakam.com

## சிறப்புப் பொருளாதார மண்டலச் சட்டத் திருத்தம்:

# சர்வகட்சி பித்தலாட்டம்

சிறப்புப் பொருளாதார மண்டலங்களை எதிர்த்து நாட்டின் பல் பகுதிகளில் நடந்து வரும் போராட்டங்களையடுத்து, 2005-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலச் சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்திருக்கிறது, மைய அரசு. இதன் மூலம், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மக்களுக்கு எதிரானவையல்ல எனக் காட்டிக் கொள்வதோடு, அதற்கு எதிராக நடந்து வரும் போராட்டங்களை நீர்த்துப் போக வைக்கவும் முயலுகிறது.

''குறைந்தபட்சம் 1,000 ஹெக்டேர் (2,500 ஏக்கர்) நிலப்பரப்பில் தான் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்க வேண்டும்; அதிகபட்ச நில உச்ச வரம்பு எதுவும் கிடையாது'' என்ற 2005-ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலச் சட்டத்தில், தற்பொழுது, ''சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு 5,000 ஹெக்டேருக்கு மேல் நிலம் ஒதுக்கக் கூடாது'' என உச்சவரம்பு விதிக்கப்பட்டுள்ளது.

''மாநில அரசு நிலங்களைக் கையகப்படுத்திக் கொடுப்பதற்குப் பதிலாக, சிறப்புப் பொருளாதார மண்டலங்களைத் தொடங்க அனுமதி பெற்றுள்ள நிறுவனங்களே நேரடியாக விவசாயிகளிடம் பேரம் பேசி, நிலங்களை வாங்கிக் கொள்ளலாம்.''

''சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக விவசாய நிலங்களை விற்கும் விவசாயிகளுக்கு, சம்மந்தப்பட்ட மாநில அரசு நிர்ணயிக்கும் வரையறைபடி, மறுவாழ்வுக்கான நிவாரண் உதவிகளைச் செய்ய வேண்டிய பொறுப்பு, சிறப்புப் பொருளாதார மண்டலங்களைத் தொடங்கும் நிறுவனங்களைச் சார்ந்தது. மேலும், நிலத்தை விற்கும் ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திலிருந்தும் ஒருவருக்கு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் வேலை வாய்ப்பு வழங்க வேண்டும்'' என மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தொழில் தொடங்கும் முதலாளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பல்வேறு விதமான வரிச் சலுகைகள் மீது கை வைக்க விரும்பாத மைய அரசு, சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் கட்டிடங்களைக் கட்டுவது, அவற்றைப் பராமரிப்பது போன்ற பணிகளைக் குத்தகைக்கு எடுக்கும் நிறுவனங்களுக்கும் இந்த வரிச் சலுகைகளை அளிக்கும் மாற்றத்தை தற்பொழுது கொண்டு வந்துள்ளது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்கான விண்ணப்பங்களைப் பரிசீலித்து அனுமதி அளிக்கும் காலக் கெடுவை மூன்று ஆண்டுகளில் இருந்து ஓராண்டாகக் குறைப்பதனைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்வதென்றும் மைய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்களையும், சலுகைகளையும் அறிவித்த கையோடு, மேலும் 83 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தொடங்குவதற்கான அறிவிக்கையினை வெளியிடும் அனுமதியையும் வழங்கி விட்டது. இந்த 83-ஐயும், சேர்த்து இதுவரை 162 சிறப்புப் பொருளாதார மண்டலங்களைத் தொடங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது; 325 விண்ணப்பங்கள் அனுமதி வழங்கப்படுவதற்கான பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

•••

பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டும் கதையாக, காங்கிரசு கூட்டணி ஆட்சியை ஆதரிக்கும் இடதுசாரிக் கட்சிகள், இம்மாற்றங்களை ஏற்றுக் கொள்ள முடியாதென அறிவித்துள்ளன.

''சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்குக் குறைந்தபட்சம் 400 ஹெக்டேர் (1,000 ஏக்கர்) நிலமும், அதிகபட்சமாக 2,000 ஹெக்டேர் (5,000 ஏக்கர்) நிலமும் போதுமானது; மாநில அரசுகளை ஒதுக்கிவிட்டு, முதலாளிகளே விவசாயிகளிடம் பேரம் பேசி நிலத்தை வாங்குவதை அனுமதிக்கக் கூடாது; நிலங்களைக் குத்தகைக்குத்தான் விட வேண்டுமெ

**மகாராஷ்டிராவில் பத்தாயிரம் ஹெக்டேர் பரப்பளவில் அம்பானி உருவாக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை எதிர்த்து ராய்கட் மாவட்டத்திலுள்ள வாத்கல் நகரில் நடந்த சாலைமறியல்.**




படிப்பகம்

www.padippakam.com



ஒரிசாவின் கலிங்கா நகரில் ஒரு வருடத்திற்கு முன்பு டாடா நிறுவனத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டதை எதிர்த்து நடந்த போராட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட 13 பழங்குடியினரை நினைவு கூறும் உழைக்கும் மக்கள்.

யொழிய, நிலத்தை முதலாளிக்ளுக்குச் சொந்தமாகக் கிரையம் செய்து கொடுக்கக் கூடாது; வரிச் சலுகைகளைக் குறைக்க வேண்டும்; எல்லாவிதமான தொழில்களையும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைக்க அனுமதிக்கக் கூடாது; நிலத்தை விற்கும் விவசாயிகளைச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் பங்குதாரர்களாக ஆக்க வேண்டும்; சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் அதிகபட்ச வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் ஏற்படுத்துவதோடு, தொழிலாளர்களுக்குச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்குள்ளேயே குடியிருப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும்'' என இடதுசாரிகள் மாற்று ஆலோசனைகளை - மாற்றங்களை முன் வைத்துள்ளனர்.

இடதுசாரிக் கூட்டணியால் முன் வைக்கப்படும் இந்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தினால்கூட, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சொக்கத் தங்கமாகி விடாது என்பது ஒருபுறமிருக்க, இந்த ஆலோசனைகளைப் போலி கம்யூனிஸ்டுகளே கடைப்பிடிப்பதில்லை என்பதே உண்மை.

சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க அதிகபட்ச நில உச்சவரம்பு (2,000 ஹெக்டேர்) 5,000 ஏக்கர் என நிர்ணயிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கும் போலி கம்யூனிஸ்டுகள், மேற்கு வங்கம் நந்திகிராமத்தில் 14,500 ஏக்கர் நிலத்தை சலீம் குழுமத்திற்குத் தூக்கிக் கொடுக்கத் திட்டம் போட்டனர்.

சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தொழில் தொடங்கும் முதலாளிகளுக்கு அளிக்கப்படும் வரிச் சலுகைகளைக் குறைக்க வேண்டும் என ஆலோசனை கூறும் இடதுசாரிக் கூட்டணி, சிங்குரில் 140 கோடி ரூபாய் பெறுமான 1,000 ஏக்கர் நிலத்தை வெறும் 20 கோடி ரூபாய்க்கு டாடாவிடம் விற்றுள்ளனர். இந்த 20 கோடி ரூபாயையும் டாடா 20 ஆண்டுகளில் செலுத்தலாம் எனச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் காலனி ஆட்சியின்பொழுது கொண்டு வரப்பட்ட 1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை மாற்ற வேண்டும் எனக் கோரும் இவர்கள், சிங்குரில் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தித்தான் விவசாயிகளின் எதிர்ப்பையும் மீறி டாடாவிற்காக நிலங்களைப் பிடுங்கினார்கள்.

சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காகப் பறிக்கப்படும் நிலங்களை முதலாளிகளுக்குக் கிரையம் செய்து கொடுக்கலாம் என்கிறது, மைய அரசு; கூடாது, நிலங்களைக் குத்தகைக்குத் தான்விட வேண்டும் என அடித்துப் பேசுகிறது சி.பி.எம். நிலத்தைப் பறி கொடுத்து விட்டு நிற்கும் விவசாயியைப் பொருத்தவரை, இந்த இரண்டுமே ஒன்றுதான்.

நிலத்தைப் பறி கொடுத்த பிறகு, விவசாயி கூலித் தொழிலாளியாகி விடுகிறான். ஆனால், சி.பி.எம்.மோ, அவனைச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் பங்குதாரராக மாற்றப் போவதாகப் பொறி வைக்கிறது. எத்தனை சிங்குர் விவசாயிகளை டாடா கார் தொழிற்சாலையின் பங்குதாரர்களாக மாற்றியிருக்கிறது சி.பி.எம்.?

நர்மதா அணை போன்ற பெரிய திட்டங்களுக்காக விரட்டியடிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மறுவாழ்வு கொடுக்காமல் அரசே ஏய்க்கும் பொழுது, சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் தனியார் முதலாளிகள் மறுவாழ்வு கொடுப்பதில் சட்டப்படியும், நியாயப்படியும் நடந்து கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியுமா?

பொதுத்துறை நிறுவனங்களுக்காக நிலத்தைக் கொடுத்த விவசாயக் குடும்பங்களில், ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் ஒருவருக்கு வேலை கொடுக்காமல் அந்த நிறுவனங்களே ஏய்த்து வரும்பொழுது, நிலத்தை இழக்கும் விவசாயிகளுக்குச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் வேலை கிடைக்கும் என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது?

•••

நிலச் சீர்திருத்தம் ஓரளவிற்கு வெற்றிகரமான முறையில் அமல்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மேற்கு வங்க மாநிலத்திலேயே, மொத்த விளைநிலத்தில் 15 சதவீத விளை நிலங்கள்தான் பிரித்துக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும்; நிலச் சீர்திருத்தம் மூலம் நிலம் பெற்றவர்களில் 13 சதவீதம் பேர் தங்களது நிலத்தைப் பல்வேறு காரணங்களால் இழந்து விட்டதாகவும்; மேற்கு வங்க மாநிலத்தில் நிலமற்ற கிராம மக்கள் எண்ணிக்கை 39.6 சதவீதத்தில் இருந்து (1987-88) 49.8 சதவீதமாக அதிகரித்து விட்டதாகவும் (2000-01) அம்மாநில அரசு வெளியிட்டுள்ள மனிதவள மேம்பாட்டு அறிக்கை குறிப்பிடுகிறது.

இப்புள்ளி விவரம், நாடெங்கும் நிலச்சீர்திருத்தம் தீவிரமாக, புரட்சிகரமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் நேரத்தில், போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எல்லா வண்ண ஓட்டுக் கட்சிகளும் சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெயரில், அரசே நிலப்பறி இயக்கம் நடத்துவதைப் பகிரங்கமாக ஆதரிக்கின்றன.

இந்த நிலப்பறி இயக்கம் நடுத்தர - ஏழை - கூலி விவசாயிகளைப் போண்


படிப்பகம்

www.padippakam.com

டியாக்கி, உயிர் வாழ்வதற்கு உழைப்புச் சக்தியை விற்பதைத் தவிர வேறெதுவும் இல்லாத கூலித் தொழிலாளிகளாக உழைப்புச் சந்தைக்குள் தள்ளி விடுகிறது. வேலைக்குப் போட்டி போடும் பெரும் கூலிப் பட்டாளத்தைக் காட்டி, குறைந்தபட்ச கூலியை மேலும் மேலும் குறைப்பதற்கான வாய்ப்பை முதலாளிகளுக்குத் தருகிறது. விவசாயம் ஏற்கெனவே நெருக்கடியில் சிக்க வைக்கப்பட்டு, உணவுப் பொருள் தட்டுப்பாடு நிலவும் நேரத்தில், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாக அமைகின்றன.

மேலும், சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பது மறுகாலனி ஆதிக்கத்தின் துலக்கமான வடிவம். அம்மண்டலங்களில் இந்தியச் சட்டங்கள் செல்லுபடியாகாது என்பதும்; இந்திய நாட்டவர் அம்மண்டலங்களுக்குள் நுழையத் தனி அடையாள அட்டைகள் வேண்டும் என்பதும்; அம்மண்டலங்கள் பன்னாட்டு நிறுவனங்களின் / தரகு முதலாளிகளின் தனி சமஸ்தானங்களாக விளங்கும் என்பதும், கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி புதிய வடிவத்தில் மக்கள் மீது திணிக்கப்படுவதை நிரூபிக்கின்றன.

எனவே, சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எதிரான போராட்டம் என்பது சாராம்சத்தில் மறுகாலனி ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டம். ஆனால், போலி கம்யூனிஸ்டுகளோ இப்போராட்டத்தை தொழில் வளர்ச்சிக்கு எதிரான போராட்டமாகச் சித்தரிக்கிறார்கள். இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அவசியமானவை என்ற ஓட்டுக் கட்சிகளின் வாதத்தை, அவைகளின் குருபீடமான உலக வங்கியும், ஆசிய வளர்ச்சி வங்கியும் கூட ஒப்புக் கொள்ளவில்லை. ஆனாலும், போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட ஓட்டுக் கட்சிகளோ இந்த விசயத்தில் அரசனை விஞ்சிய விசுவாசிகளாக நடந்து கொள்கின்றன.

சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற இந்த நிலப்பறி இயக்கத்தை, மறுகாலனி ஆதிக்கத் தாக்குதலை சில சில்லறை சீர்திருத்தங்களால் தடுத்து விட முடியாது. அப்படிச் சொல்வது, கத்தியின்றி, ரத்தமின்றி இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்து விட்டதாகக் கூறப்படும் மோசடிக்கு ஈடானது.

• குப்பன்

## நல்லகாமன் வழக்குத் தீர்ப்பு:

# பாம்பும் சாகாமல்... தடியும் நோகாமல்...

புதிய ஜனநாயகம் இதழின் வாசகர்களுக்கு மட்டுமல்ல, ஜூனியர் விகடன், நக்கீரன், குமுதம் ரிப்போர்ட்டர் போன்ற முதலாளித்துவப் பத்திரிகைகளின் வாசகர்களுக்கும் ''நல்லகாமனின் கதை'' நினைவிருக்கக் கூடும். ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்பு வாடிப்பட்டியைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரரான நல்லகாமன், தமிழக ஆயுதப் படையைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் பைரவ் சிங்கின் வீட்டை, ரூ. 5,000 கொடுத்து ஒத்திக்கு எடுத்தார். ஒத்திப் பணத்தைத் திருப்பித் தராமலேயே தனது வீட்டில் இருந்து நல்லகாமனைத் துரத்தத் திட்டம் போட்டார் பைரவ் சிங். இதற்கு உடன்பட மறுத்தார் நல்லகாமன். அப்பொழுது வாடிப்பட்டியில் போலீசு உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வந்த ''சங்கரராமன் கொலை வழக்கு புகழ்'' பிரேம்குமார், இப்பிரச்சினையில் தலையிட்டு கட்டைப் பஞ்சாயத்து செய்ததோடு, நல்லகாமன் குடும்பத்தினரை மிருகத்தனமாகச் சித்திரவதை செய்தார்.

இம்மனித உரிமை மீறலுக்காக பிரேம்குமார் உள்ளிட்டு 11 போலீசாரைத் தண்டிக்கக் கோரி கடந்த 25 ஆண்டுகளாக நீதிமன்றங்களில் சட்டரீதியாகப் போராடி வருகிறார் நல்லகாமன். (மனித உரிமை பாதுகாப்பு மையம் வெளியிட்டுள்ள நல்லகாமன் கதை என்ற சிறு வெளியீட்டிலும்; புதிய கலாச்சாரம் அக்.2002; புதிய ஜனநாயகம் ஜூலை 2003 இதழ்களிலும் நல்லகாமனின் போராட்டம் குறித்து விரிவாக எழுதப்பட்டுள்ளது.)

இந்த வழக்கில், தற்பொழுது தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள போலீசு கண்காணிப்பாளர் பிரேம்குமாருக்கும், மற்றும் செல்லையா, சுப்பிரமணி, ராமகிருஷ்ணன் ஆகிய மூன்று போலீசாருக்கும் ஒரு மாத கால சாதாரண சிறை தண்டனை விதித்து, 3.4.07 அன்று மதுரை உயர் நீதி மன்றக் கிளை தீர்ப்பு வழங்கியிருக்கிறது. உள்ளூர் நீதிமன்றம் தொடங்கி உச்சநீதி மன்றம் வரை சென்று சட்டப் போராட்டம் நடத்தி, அதற்காகத் தனது சொத்து சுகத்தையெல்லாம் இழந்து விட்ட நல்லகாமன், 25 ஆண்டு காலப் போராட்டத்திற்குப் பிறகு கிடைத்திருக்கும் இத்தீர்ப்பை, ''அற்பத்தனமானது'' என விமர்சித்திருக்கிறார்.

போலீசு சித்திரவதையால் பாதிக்கப்பட்ட நல்லகாமன், தனது சொந்த விருப்பு வெறுப்பின் காரணமாக மனம் வெதும்பிக் கூறிய விமர்சனமாக, இதை ஒதுக்கிவிட முடியாது. மதுரை உயர்நீதிமன்றக் கிளை, இவ்வழக்கு தொடர்பாக அளித்துள்ள தீர்ப்பை முழுமையாகப் படித்தால், மனசாட்சியுள்ள யாருமே இந்த முடிவுக்குத்தான் வர முடியும்.

சிறு காயம் ஏற்படுத்துதல், கைவிலங்கு போட்டு இழுத்துச் செல்லுதல் ஆகிய இரு பிரிவுகளின் கீழ் பிரேம்குமாரையும்; மற்ற மூன்று போலீசாரையும் குற்றவாளிகளாக அறிவித்திருக்கிறது, மதுரை உயர்நீதி மன்றக் கிளை. இந்தியக் குற்றவியல் தண்டனைச் சட்டத்தின்படி, இக்குற்றங்களுக்கு, இரண்டு ஆண்டு முதல் மூன்றாண்டு கால சிறைத் தண்டனையைக் கண்ணை மூடிக் கொண்டு வழங்க முடியும். ஆனால், உயர்நீதி மன்ற நீதிபதியோ, நீதியை நிலைநாட்ட இக்குற்றவாளிகளுக்கு ஒரு மாத கால சாதாரண சிறைத் தண்டனையே போதும் எனத் தீர்ப்பு எழுதியிருக்கிறார். பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல் என்ற பழமொழிக்கு ஏற்ப எழுதப்பட்டுள்ள இத்தீர்ப்பை, அற்பத்தனமானது என விமர்சிக்காமல், கைதட்டி வரவேற்கவா முடியும்?

நல்லகாமனைச் சித்திரவதை செய்தது தொடர்பாக, தன் மீது தமிழக அரசு சார்பாக மாவட்ட வருவாய் அதிகாரி (ஆர்.டி.ஓ.) போட்ட வழக்கைத் தள்ளுபடி செய்யக் கோரி பிரேம்குமார் தொடுத்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி கற்பக விநாயகம், பிரேம்குமாரின் வழக்கைத் தள்ளுபடி செய்து ஐந்தாண்டுகளுக்கு முன்பு வழங்கிய தீர்ப்பில் ''சட்டத்தின் மீதோ உண்மையின் மீதோ பிரேம்


படிப்பகம்

www.padippakam.com

குமாருக்குக் கடுகளவு கூட மரியாதை இல்லை'' எனப் பகிரங்கமாகவே கண்டனம் செய்திருந்தார். இப்படிபட்ட நடத்தை கொண்ட பிரேம்குமாரை, ஒருபுறம் இதே இரண்டு குற்றச்சாட்டுக்களின் கீழ் குற்றவாளி என் அறிவித்த மதுரை விரைவு நீதிமன்றம், மறுபுறம் அவரது நன்னடத்தையின் காரணமாகத் தண்டனை எதுவும் வழங்காமல் விடுதலை செய்வதாக ஜூலை 2003-இல் தீர்ப்பளித்தது. விரைவு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, பிரேம்குமாரின் விடுதலை ரத்து செய்யப்பட்டு, அவருக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் எனக் கோரி நல்லகாமன் மதுரை உயர்நீதி மன்றக் கிளையில் வழக்கு தொடுத்தார்.



நல்லகாமன்

''குற்றவாளிகள் போலீசு அதிகாரிகள் என்பதால், அவர்களுக்குத் தண்டனை வழங்குவதில் விசாரணை நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்) மெத்தனமாக நடந்து கொண்டுள்ளதாக'' அத்தீர்ப்பை விமர்சித்துள்ள உயர்நீதி மன்றக் கிளையோ, மூன்று ஆண்டு காலத் தண்டனை கொடுப்பதற்குப் பதிலாக ஒரு மாத சிறைத் தண்டனை போதும் எனத் தீர்ப்பளித்திருப்பதன் மூலம் நீதியைக் கேலிக் கூத்தாக்கி விட்டது. குற்றவாளி பிரேம்குமார் போலீசு கண்காணிப்பாளர்; போலீசு சித்திரவதையால் பாதிக்கப்பட்ட நல்லகாமன், சாதாரண குடிமகன் என்பது தவிர, உயர்நீதி மன்றத்தின் கருணைக்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

''குற்றவாளிகள், இந்திய அரசியல் சாசனத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையான, உயிர் வாழும் உரிமையை மீறியிருக்கிறார்கள்; அரசு ஊழியர்கள் பொது மக்களுக்கு முன் மாதிரியாகத் திகழ வேண்டும் என்ற இலக்கணத்தைக் குற்றவாளிகள் கடைப்பிடிக்கவில்லை; இப்படிபட்ட மனித உரிமை மீறல்கள் நடப்பதைத் தடுக்கும் வண்ணம் தண்டனை வழங்க வேண்டும்'' என்றெல்லாம் தீர்ப்பில் ''கடுமை'' காட்டியிருக்கும் நீதிபதி, தண்டனை வழங்குவதில் வேண்டுமென்றே ''கோட்டை'' விட்டதன் மூலம், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சி இருக்கிறார்.

நல்லகாமன் போலீசாரால் சித்திரவதை செய்யபட்டது தொடர்பாக, பிரேம்குமார் உள்ளிட்டு நான்கு போலீசார் மீது கொலைமுயற்சி, சட்டவிரோதமாக அடைத்து வைத்தல், துன்புறுத்தி வாக்குமூலம் வாங்குதல் உள்ளிட்டு ஏழு குற்றச்சாட்டுகளின் கீழ் 1983-ஆம் ஆண்டே தமிழக அரசு வழக்கு பதிவு செய்திருக்கிறது. நல்லகாமன், தன்னைச் சித்திரவதை செய்த பிரேம்குமார் உள்ளிட்ட 11 போலீசார் மீது கொலைமுயற்சி, சட்ட விரோதமாகக் கும்பல் சேர்த்துக் கொண்டு தாக்குதல் **(Unlawful assembly)** உள்ளிட்டு 13 குற்றச்சாட்டுகளின் கீழ் 1984-ஆம் ஆண்டே தனிநபர் வழக்கு **(private complaint)** பதிவு செய்திருக்கிறார்.

இக்குற்றச் சாட்டுக்கள் அனைத்தும் ஏனோதானோவென்று சுமத்தப்பட்டவையல்ல; இறந்துபோய்விட்ட நல்லகாமனின் மனைவி சீனியம்மாள், வாடிப்பட்டி போலீசு நிலையத்தில் பிரேம்குமாரால் மானபங்கப்படுத்தப் பட்டதைக் கண்டித்து, ஆசிரியர் சங்கங்கள் சம்பவம் நடந்த மறுநாளே (2.2.82) கண்டன ஊர்வலம் நடத்தின.

நல்லகாமனையும், அவரது மகன் மதிவாணனையும் கைவிலங்கிட்டு, சங்கிலியால் பிணைத்து, வாடிப்பட்டி போலீசு நிலையம் தொடங்கி வாடிப்பட்டி பேருந்து நிலையம் முடிய, பிரேம்குமாராலும், மற்ற போலீசாராலும் அடித்து இழுத்துச் செல்லப்பட்டதை அந்த ஊரே பார்த்து திகைத்துப் போய் நின்றிருக்கிறது. பிரேம்குமாரின் இந்தக் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்து, வாடிப்பட்டியில் 3.2.82 அன்று பொது வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது. இம்மனித உரிமை மீறல் தொடர்பாக தமிழக அரசு நடத்திய விசாரணையில், 212 பேர் நேரடியாகவே மாவட்ட வருவாய் அதிகாரியிடம் சாட்சியம் அளித்துள்ளனர். இவ்விசாரணையின் அடிப்படையில், சம்பவம் நடந்தபொழுது உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வந்த பிரேம்குமார் தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

இந்த சாட்சியங்கள் அனைத்தும் ஆவணங்களாகவே பதிவாகி இருப்பதால், 25 ஆண்டு காலம் கழிந்த பிறகும், இச்சாட்சியங்களுள் ஒன்றுகூட பிறழ் சாட்சியமாக மாறவில்லை. நல்லகாமன் சார்பாக வாதாடிய மனித உரிமைப் போராளியும், மூத்த வழக்கறிஞருமான கே.ஜி. கண்ணபிரானும், மனித உரிமை பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்களும் பிரேம்குமாரையும், மற்ற போலீசாரையும் ஆர்.டி.ஓ.வும், நல்லகாமனும் குறிப்பிட்டுள்ள அவரது குற்றச்சாட்டுகளின் கீழ் தண்டிப்பதற்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதை, பல்வேறு உச்சநீதி மன்றத் தீர்ப்புகளில் இருந்தும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

இத்துணை ஆதாரங்களையும், சாட்சியங்களையும் கீழமை நீதிமன்றம் மட்டுமல்ல, உயர்நீதி மன்றமும் கூட குப்பைக் கூடைக்குள் வீசியெறிந்து விட்டது. ஒப்புக்குச் சப்பாணியாக இரண்டு சாதாரண பிரிவுகளின் கீழ் தண்டித்து, குறைவான தண்டனையளித்து தனது அதிகார வர்க்க பாசத்தைக் காட்டியிருக்கிறது, உயர் நீதி மன்றம்.

''நல்லகாமனும், அவரது மகன் மதிவாணனும் போலீசாரால் தாக்கப்பட்டிருப்பது

**மதுரை உயர்நீதி மன்றக் கிளை அளித்த தீர்ப்பை விளக்கி, மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் (HRPC) சார்பாக சென்னையில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பு.**



www.padippakam.com

உண்மையென்றாலும், அவ்விருவரின் உயிர்நிலை உறுப்புகளின் மீது போலீசார் தாக்கவில்லை. எனவே, ''கொலை முயற்சி குற்றச்சாட்டைத் தள்ளுபடி செய்வதாக'' உயர்நீதி மன்ற நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். ''போலீசு அடி'' என்ற ஒருவகை சித்திரவதை இருப்பதை, இந்த நீதிபதி அனுபவித்து இருந்தால், தீர்ப்பை வேறுமாதிரி எழுதியிருப்பார்.

பிரேம்குமாரின் அட்டூழியங்களை நியாயப்படுத்துவதற்காகவே, ''நல்லகாமனும் அவரது குடும்பத்தாரும் போலீசாரைக் கடமையை செய்ய விடாமல் தடுத்துவிட்டதாக''க் குற்றம் சுமத்தி ஒரு மோசடி வழக்கை நல்லகாமன் மீது தமிழக போலீசு தொடுத்திருந்தது. இவ்வழக்கில், நல்லகாமனைக் குற்றவாளியாக அறிவித்த மதுரை விரைவு நீதிமன்றம், அவரது நன்னடத்தையைக் காரணம் காட்டி, அவருக்குத் தண்டனை விதிக்காமல் விடுதலை செய்வதாகத் தீர்ப்பளித்திருந்தது. இத்தீர்ப்பை ரத்து செய்யக் கோரி நல்லகாமன் தொடுத்த வழக்கை, மதுரை உயர் நீதி மன்றக் கிளை தள்ளுபடி செய்து விட்டது.

இதன்மூலம், லீசுக்கு எடுத்த வீட்டைக் காலி செய்யக் கோரும், குடியுரிமை பிரச்சினையில், சக போலீசுக்காரன் பைரவ் சிங்குக்காக, பிரேம்குமார் தனது அதிகார வரம்பை மீறி போலீசு நிலையத்தில் கட்டைப் பஞ்சாயத்து செய்ததையும்; இதற்காக நல்லகாமன், அவரது மனைவி சீனியம்மாள், மகன் மதிவாணன் மூவரையும் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு சித்திரவதை செய்ததையும்; நல்லகாமன் மனைவியைக் கேவலமாகத் திட்டி மானபங்கப்படுத்தியதையும் போலீசாரின் ''கடமையாகவும்'', இந்த அநியாயத்தைத் தடுக்க முயன்ற நல்லகாமனின் தற்காப்பு உரிமையைக் ''குற்றமாகவும்'' காட்டியிருக்கிறது, உயர்(அ)நீதி மன்றம்.

நியாயப்படி மட்டுமல்ல, சட்டப்படி பார்த்தாலும் கூட தமிழக அரசு சார்பில் ஆர்.டி.ஓ போட்ட வழக்கில், மதுரை விரைவு நீதிமன்றம் பிரேம்குமார், செல்லையா, சுப்பிரமணி, ராமகிருஷ்ணன் ஆகிய நால்வரையும் குற்றவாளியாக அறிவித்தவுடனேயே, தமிழக அரசு இந்த நான்கு குற்றவாளிகளையும் பதவியில் இருந்து நீக்கியிருக்க வேண்டும். பிரேம்குமாரோ, சங்கரராமன் கொலை வழக்கு தொடர்பாக அ.தி.மு.க. - தி.மு.க.. இடையே நிலவும் அரசியல் ஆதாய போட்டா போட்டி காரணமாகவே தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார். உயர் நீதி மன்றத் தீர்ப்புக்குப் பிறகும்கூட பிரேம்குமாரை பணியில் இருந்து நிரந்தரமாக நீக்கத் தயங்குகிறது, தமிழக அரசு.



பிரேம்குமார்

செல்லையா, ராமகிருஷ்ணன் என்ற இரண்டு குற்றவாளிகளும் ஏற்கெனவே எவ்வித வில்லங்கமும் இன்றிப் பதவியில் இருந்து ஓய்வு பெற்று விட்டனர். சுப்பிரமணி பதவியில் இருந்து ஓய்வு பெறுவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக, உயர்நீதி மன்றத் தீர்ப்பு வந்த பிறகே, பதவியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார். மேலும் இந்த நான்கு குற்றவாளிகளுள் ஒருவர்கூட உயர்நீதி மன்றத் தீர்ப்பின்படி கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப் படவில்லை.

தி.மு.க. அரசின் இந்த மெத்தனத்தைப் பயன்படுத்திக் கொண்ட பிரேம்குமார், ''தான் தஞ்சாவூர் மாவட்ட போலீசு கண்காணிப்பாளராகப் பணிபுரிவதாக'' ஒரு பொய்யைச் சொல்லி, போலீசாரிடம் சரண் அடைவதில் இருந்து விலக்கு அளிக்கும் உத்தரவை உச்சநீதி மன்றத்திடம் இருந்து பெற்று விட்டார். இப்படியாக, ஒப்புக்காக அளிக்கப்பட்ட அற்பத்தனமான தீர்ப்பும், ஒருமாதகாலச் சிறை தண்டனையும் நடைமுறையில் ஒன்றுமில்லாத காகிதக் குப்பையாக ஆக்கப்பட்டு விட்டது.

போலீசின் மனித உரிமை மீறல்களை எதிர்த்துச் சட்டரீதியாகப் போராடும் பொழுது, அப்போராட்டம் இந்திய ஜனநாயகம், அதைத் தாங்கி நிற்கும் நீதிமன்றம் ஆகியவற்றின் போலித்தனத்தையும், கயமைத்தனத்தையும் அம்மணமாக்கிவிடுகிறது என்பதற்கு நல்லகாமனின் கதை இன்னுமொரு உதாரணம். மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் போலீசாரைச் சட்டப்படி தண்டிக்கக் குதிரைக்குக் கொம்பு முளைக்க வேண்டும் என்றால், சட்டத்திற்கு அப்பாற்பட்டு அமைப்பு ரீதியாகப் போராடுவதும், மக்கள் நீதி மன்றங்களை அமைத்து போலீசு மிருகங்களைத் தண்டிப்பதும்தான் ஒரே மாற்று வழி!

• ரஹீம்

**மதுரை உயர்நீதி மன்றக் கிளையில் நல்லகாமனுக்காக வாதாடிய முதுநிலை வழக்குரைஞர் கே.ஜி.கண்ணபிரானுடன் (இடமிருந்து மூன்றாவது) மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்கள்.**




படிப்பகம்

www.padippakam.com

# நந்திகிராமப் படுகொலைகள்!

# சி.பி.எம்.இன் பயங்கரவாதத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம்-பிரச்சார இயக்கம்

**மே.**வங்க மாநிலத்தின் நந்திகிராமத்தில் கடந்த மார்ச் 14-ஆம் தேதியன்று சி.பி.எம். குண்டர்களும் போலீசும் இணைந்து நடத்திய கொலைவெறியாட்டத்தை மூடி மறைத்து, கூசாமல் அவதூறு பொய் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது சி.பி.எம். கட்சி.

இக்கோயபல்சு புளுகுணிப் பிரச்சாரத்தை அம்பலப்படுத்தியும், சி.பி.எம். கட்சியின் பாசிச கோரமுகத்தைத் தோலுரித்துக் காட்டியும், மே.வங்க போலி கம்யூனிச அரசை மண்டியிட வைத்த நந்திகிராம மக்களின் உறுதிமிக்க போராட்டத்தை விளக்கியும், மறுகாலனியாக்கத்தை வீழ்த்த நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளில் அணிதிரள அறைகூவியும் ம.க.இ.க., வி.வி.மு., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் விரிவான பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டன.

இராமநாதபுரம் மாவட்டம் *திருவாடனையில்* ம.க.இ.க., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகளின் சார்பாக, மே.வங்க சி.பி.எம். அரசின் படுகொலைகளைக் கண்டித்து 26.3.07 அன்று நடந்த ஆர்ப்பாட்டமும், *பரமக்குடியில்* ம.க.இ.க., வி.வி.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில் 5.4.07 அன்று நடந்த கண்டன ஆர்ப்பாட்டமும், புத்ததேவின் அண்டப்புளுகையும், விவசாயிகளை நரபலி கொடுத்து பன்னாட்டு முதலாளிகளுக்கு விசுவாச சேவை செய்யும் சி.பி.எம். அரசின் கைக்கூலித்தனத்தை அம்பலப்படுத்தி முன்னணித் தோழர்கள் ஆற்றிய கண்டன உரையும் உழைக்கும் மக்களுக்குப் புதிய பார்வையை அளிப்பதாக அமைந்தன. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தின் வீச்சையும் அது உழைக்கும் மக்களிடம் ஏற்படுத்திய தாக்கத்தையும் கண்டு பீதியடைந்து, வாராந்திர நன்கொடை வசூலுக்காக வரும் சி.பி.எம். கட்சியினர், அந்த வாரத்தில் திருவாடனை சந்தை பக்கமே எட்டிப் பார்க்கவில்லை.

சென்னை அருகே, ஆலைத் தொழிலாளர்களும் அமைப்புசாரா தொழிலாளர்களும் நிறைந்த *கும்மிடிப்பூண்டியில்* மார்ச் 28-ஆம் தேதியன்று பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன் சிறப்புரையாற்றிய தெருமுனைக் கூட்டமும், *நெய்வேலியில்* ஏப்ரல் 9,10,11 தேதிகளில் டவுன்ஷிப், அனல் மின்நிலைய வாயில், மந்தாரகுப்பம் ஆகிய பகுதிகளில் பு.ஜ.தொ.மு. சார்பில் நடந்த தெருமுனைக் கூட்டங்களும், தொழிலாளர்களிடம் சி.பி.எம். மீதான பிரமைகளைத் தகர்த்து புரட்சிகர சங்கத்தில் அணிதிரண்டு போராட அறைகூவின.

கொலைகார முதல்வர் புத்ததேவின் கொடும்பாவியை எரித்து மார்ச் 17-ஆம் நாளன்று போராட்டம் நடத்திய தஞ்சை ம.க.இ.க., பு.மா.இ.மு. அமைப்புகள், அதன் தொடர்ச்சியாக பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு 8.4.07 அன்று *தஞ்சை* கீழவாசல் ஆட்டு மந்தை தெருவில் பொதுக்கூட்டத்தை நடத்தின. ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன், கர்நாடக மாநில உயர்நீதி மன்ற வழக்குரைஞர் தோழர் பாலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சி.பி.எம்.மின் ஏகாதிபத்திய சேவையையும், அதன் பொய்கள் - சதிகள் - கொலைகளையும் அங்குலம் அங்குலமாகத் திரைகிழித்துக் காட்டிய இப்பொதுக்கூட்டமும், நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளில் அணிதிரள அறைகூவிய ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன.

*புதுச்சேரியில்* தேங்காய்திட்டு, முருங்கம்பாக்கம், முதலியார் பேட்டை, அரியாங்குப்பம், திருபுவனை, திருவண்டார்கோயில் ஆகிய இடங்களில் பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. சார்பாக ஏப்ரல் மாதத்தில் தொடர்ச்சியாக தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. துறைமுக விரிவாக்கம் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எதிராக புதுவை மக்கள் போராடி வரும் சூழலில், கொலைகார சி.பி.எம். கட்சியை அம்பலப்படுத்தியும் நந்திகிராம மக்களின் போராட்டப் படிப்பினைகளை உணர்த்தியும் நடந்த இக்கூட்டங்கள் புதுவை மக்களிடம் விழிப்புணர்வூட்டுவதாக அமைந்து உற்சாகமான வரவேற்பைப் பெற்றது.

*உசிலம்பட்டி* வட்டாரத்தில், விவசாயிகளைச் சுட்டுக் கொன்ற கொலைகார சி.பி.எம். ஆட்சியாளர்களுக்கு எதிராக சாத்தங்குடி, செல்லம்பட்டி, கருமாத்தூர், முண்டுவேலம்பட்டி, ஆரியபட்டி ஆகிய ஊர்களில் தெருமுனைக் கூட்டங்களையும், உசிலம்பட்டி, செக்கானூரணி, திருமங்கலம் ஆகிய ஊர்களில் பொதுக் கூட்டங்களையும் வி.வி.மு. நடத்தியது. செங்கொடி ஏந்தி விவசாயிகளின் தோழனாக நாடகமாடிய பாசிச் சி.பி.எம். கட்சியை அம்பலப்படுத்திக் காட்டிய இப்பிரச்சார இயக்கம், இவ்வட்டாரமெங்கும் உழைக்கும் மக்களிடமும் இடது-வலது போலி கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள புரட்சியை நேசிக்கும் அணிகளிடமும் புதிய பார்வையையும் புதிய சிந்தனையையும் விதைத்தது.

நந்திகிராமப் படுகொலைகளுக்கு எதிராக இப்புரட்சிகர அமைப்புகள் ஒட்டிய சுவரொட்டிகளை பல ஊர்களில் அவசர அவசரமாகக் கிழித்தெறிந்த சி.பி.எம். குண்டர்கள், முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்த கதையாக, உழைக்கும் மக்களிடம் உண்மைகளை மூடிமறைக்க முயற்சித்துள்ளனர். ஆனால், மறுகாலனியாக்கத்துக்கு எதிராக புரட்சிகர அமைப்புகள் தொடர்ந்து நடத்திவரும் பிரச்சாரமும் போராட்டங்களும், ஏகாதிபத்திய கைக்கூலிகளான இத்துரோகிகளை அம்பலப்படுத்தி, உழைக்கும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி முடமாக்கியே தீரும் என்பது உறுதி.

**- பு.ஜ. செய்தியாளர்கள்.**




உசிலம்பட்டியில்...




பரமக்குடியில்...


படிப்பகம்

www.padippakam.com

# "அடங்கிப் போ; ஒத்து ஊது!" – புதிய தலித்திய முழக்கம்!

"அடங்க மறு; அத்து மீறு!" இது சுவரெங்கும் விடுதலை சிறுத்தைகள் எழுதி வைக்கும் முழக்கம். இதை வாசித்துவிட்டுப் பொங்கி எழும் தலித் இளைஞர்கள் அத்துமீறினால் அவர்களுக்கு ஆதரவுக் குரல் தராமல், அந்த இளைஞர்களையே ஆதிக்க சாதியிடம் "அடங்கிப் போ" என் எந்தத் தலைவராவது வற்புறுத்துவாரானால், அவரை நாம் நிச்சயமாக தலித் துரோகி எனச் சொல்லி விடலாம். ஆனால், அவ்வாறு அடங்கிப் போகச் சொல்வதே விடுதலைச் சிறுத்தைகளின் தலைமைதான் எனும்போது, அச்செயலை அம்பலப்படுத்தி விமர்சிக்காமல் தலைமையை வியந்தோதி "சேரிப்புயல்" என்றோ, "வாழும் அம்பேத்கர்" என்றோ நாணயமுள்ளவர்கள் துதிபாடிக் கொண்டிருக்க முடியுமா?

புதுக்கூரைப்பேட்டை, கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வட்டத்தில் உள்ள சிறு கிராமம். இக்கிராமத்தின் தலித் காலனியைச் சேர்ந்த சாமிக்கண்ணு என்பவரின் மகன் முருகேசனும், அதே ஊரின் ஊராட்சித் தலைவர் துரைசாமியின் மகள் கண்ணகியும் 8.7.2003 அன்று நஞ்சு ஊற்றிக் கொல்லப்பட்டு உடனடியாக எரிக்கப்பட்டனர். பொறியியல் பட்டம் படித்த தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த முருகேசனை, வன்னியப் பெண்ணான கண்ணகி காதலித்ததாலேயே, அப்பெண்ணின் வீட்டார்-உறவினர்களால் இருவரும் தேடிக் கண்டுபிடிக்கப் பட்டு, ஊருக்கு வெளியேயுள்ள முந்திரிக் காடொன்றில் கட்டி வைத்து உதைக்கப்பட்டனர். கண்ணகியின் அண்ணன் மருதுபாண்டிதான் முருகேசனின் வாயில் பூச்சிக் கொல்லி மருந்தை ஊற்றிக் கொன்றார். முருகேசனின் தந்தையும், சித்தப்பா அய்யாசாமியும் கயிற்றால் கட்டப்பட்டிருந்ததால் இக்கொடுஞ்செயலைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர, அன்றைக்கு அவர்களால் வேறொன்றும் செய்ய இயலவில்லை.

தாழ்த்தப்பட்ட சாதிக்காரனைக் காதலித்துத் தன் சுயசாதிக் கவுரவத்தைச் சிதைத்துவிட்ட தங்கையின் வாயில் விசம் ஊற்றினார் அண்ணன் மருதுபாண்டி. வாயைத் திறக்க தங்கை மறுத்திடவே, அவரின் மூக்கிலும், காதுகளிலும் விசத்தை இறக்கிச் சாகடித்தனர். சிறிது நேரத்திலேயே பிணமாகிப் போன இருவரையும் தனித்தனியே எரித்துத் தடயத்தையும் அழித்து விட்டனர்.

வன்னிய சாதிவெறி பயங்கரவாதம்: நஞ்சு ஊற்றி கொன்று தடயமே இல்லாமல் எரித்து சாம்பலாக்கப்பட்ட இளங்காதலர்கள் கண்ணகி - முருகேசன்.




படிப்பகம்

www.padippakam.com

நெஞ்சை உறைய வைக்கும் இப்படுகொலைகள் நடந்தவுடன் விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் தொலைபேசியில் சாமிக்கண்ணுவைத் தொடர்பு கொண்டு ஆறுதல் சொன்னார். போலீசு கண்டிப்பாய் நடவடிக்கை எடுக்கும் என்றார். அவரை சென்னைக்கு அழைத்து வந்து பத்திரிக்கையாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து, இந்தப் பயங்கரத்தை வெளியுலகிற்கு அம்பலப் படுத்தினார்.

இந்தச் சம்பவத்தில் ஆதிக்க வன்னிய சாதிக்கு ஆதரவாய் செயல்பட்டு வந்த போலீசு, இந்த வன்னிய சாதி வெறி பயங்கரவாதம் அம்பலமானவுடனேயே முருகேசனை தலித்களும், கண்ணகியை வன்னியர்களும் கொன்றதாக வழக்கு சோடித்து இரண்டு தரப்பிலும் சிலரைக் கைது செய்தது. தன் கண் முன்னரே தன் பிள்ளை சாவதைப் பார்க்க நேரிட்ட சாமிக்கண்ணுவையும் கொலையாளி ஆக்கிய போலீசின் இக்கொடுமையைக் கேள்வியுற்ற சென்னை உயர்நீதி மன்ற வழக்குரைஞர் ரத்தினம், தாமாகவே முன்வந்து சென்னை உயர்நீதி மன்றத்தில் "சி.பி.ஐ. இந்த வழக்கை விசாரிக்க வேண்டும்" என வழக்குத் தொடர்ந்தார். வழ்க்குரைஞர் ரத்தினம்தான் மேலவளவு கொலையாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தந்தவர்.



சாதிவெறியர்களுடன் சமரசமாகப் போகுமாறு கட்டப் பஞ்சாயத்து செய்யும் திருமாவளவனைச் சாடும் சாமிக்கண்ணு.

இந்த வழக்கை மையப் புலனாய்வுத் துறை விசாரிக்கத் தொடங்கிய அதே சமயம், விடுதலைச் சிறுத்தைகளுக்கும் பா.ம.க.வுக்கும் இடையே மீண்டும் உறவு [illegible]தது. இதன்பின் சாமிக்கண்ணுவின் உறவினரான ஊத்தாங்கால் சண்முகம் என்பவர் மூலம் திருமாவளவன் இவ்வழக்கு விவகாரத்தில் கட்டப்பஞ்சாயத்து செய்ய முயன்றார்.

"கேஸ் அது இதுன்னு விசயத்தைப் பெருசு பண்ணாதீங்க. படையாச்சிங்க ரொம்பக் கோவமா இருக்காங்க. நாளைக்கு அவங்களுக்கு எதிரா எதாச்சும் தீர்ப்பாயிட்டா அது காலத்துக்கும் பகையாயிரும்" என திருமாவளவன் சாமிக்கண்ணுவின் தம்பி அய்யாசாமியிடம் தொலைபேசி மூலம் பேசி சமரசமாகப் போகச் சொன்னதும், அய்யாசாமி திகைத்துப் போய்விட்டார். "என்ன இப்படி சொல்றீங்க?" எனக் கேட்ட அய்யாசாமியிடம் திருமா, "அன்புமணி மூலமா பிரசர் வருது. நீங்கதான் பக்குவமா முடிவெடுக்கணும்" என நைச்சியமாகப் பேசவே அய்யாசாமி "வக்கீலிடம் கேட்டு சொல்கிறேன்" என்று கூறியுள்ளார்.

கடுப்பான திருமாவோ "வழக்கு போட்டது நீங்க. இதுல வக்கீலுக்கு என்ன வேலை நடுவுல? நீங்க முடிவெடுங்க. ஒத்துக்கிட்டா பணம் கூட கணிசமா தருவதா சொல்றாங்க" என்று பேரத்துக்கு நேரடியாக இறங்கியதும், "காசு வரும். எம் புள்ள வருமா?" என்று பொட்டில் அடித்த மாதிரிக் கேட்டு விட்டு, செல்போன் மூலம் நடந்த இந்த உரையாடலை நிறுத்தினார்.

கட்டப் பஞ்சாயத்து செய்ய வந்த விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்த ஊத்தங்கால் சண்முகத்தை முருகேசனின் குடும்பம் "இந்த மாதிரி வேலை செய்யுற நினைப்பிருந்தா சொந்தக்காரன்னு கூடப் பார்க்க மாட்டோம்" எனத் திட்டித் தீர்த்தது.

"சி.பி.ஐ. ஆரம்பத்துல ஒழுங்காத்தான் விசாரணை நடத்துச்சு. தலித்கள் பாதிக்கப்பட்டிருக்கிறதால விடுதலை சிறுத்தை பிரச்சனை பண்ணும்னு பயப்பட வேண்டியதில்லை, அதை படையாச்சிங்க சரிக்கட்டிட்டாங்கன்னு தெரிஞ்சோ அல்லது வேறு என்ன காரணமோ திடீர்னு குற்றப்பத்திரிகையில முருகேசனோட சித்தப்பா அய்யாசாமியை நாலாவது குற்றவாளியா சேர்த்தது சி.பி.ஐ." என்று கூறுகிறார், வழக்கறிஞர் ரத்தினம்.

பொறியியல் பட்டம் பெற்று தன் குடும்பத்தையே உயர்த்துவான் முருகேசன் — எனப் பல நூறு கனவுகள் கொண்டிருந்த அந்தக் குடும்பம், இன்று வழக்காடி எப்படியும் வன்னிய சாதி வெறிக் கும்பலுக்குத் தண்டனை பெற்றுத் தருவது என்பதில் உறுதியாய் உள்ளது.

ஆனால், சமாதானத் தூது முயற்சியில் தோல்வி கண்ட விடுதலைச் சிறுத்தைகள் தன் தளரா முயற்சியோடு தனது விவசாய அணிச் செயலாளர் திருச்சி கிட்டுவை, வாய்தா நாளன்று நீதிமன்ற வளாகத்துக்கே அனுப்பி பேரம் பேச முயன்றது. அடுத்து, நெய்வேலி சிந்தனைச் செல்வன் எனும் விடுதலைச் சிறுத்தைகள் பிரமுகரை அனுப்பி வைத்துத் தனது 'சமுதாயப் பணி'யைத் தொடர்ந்து செய்து வருகிறது.

ஓட்டுப் பொறுக்கி அரசியலை விமர்சித்து 'தின்பது வாழைப்பழமாக இருந்தாலும் கழிவது மலம்தான்' எனக் கண்டுபிடித்த திருமா, வாக்குச்சீட்டு அரசியலுக்கு வந்ததும் முதல் வேலையாக பண்ணை ஆதிக்க சாதிவெறி மூப்பனாரைக் கரம் பிடித்தார். தமிழ்நாட்டின் அரசியல் கேவலம் வைகோவையே விஞ்சிடும் வண்ணம், அடுத்தடுத்து அணி தாவினார். தற்போது, ஒடுக்கப்படும் தன் சுயசாதி மக்கள் பக்கம் நின்று போராடாமல் கட்டப் பஞ்சாயத்துப் புரட்சி செய்கிறார். இன்னமும் இத்தகைய தலைவர்கள் தங்களது விடுதலையைப் பெற்றுத் தருவார்கள் எனத் தலித் மக்கள் நம்பிக் கிடப்பது, மண் குதிரையை நம்பி ஆற்றைக் கடக்க முயல்வது போன்றதுதான்.

*குறிப்பு: "புதுவிசை" என்ற கலாச்சார பத்திரிகையின் ஏப்ரல் - ஜூன் 2007 இதழில் வெளிவந்த "சாம்பலாகவும் மிஞ்சாதவர்கள்" என்ற கட்டுரையில் காணப்படும் முருகேசனின் உறவினர்கள் அளித்த வாக்குமூலங்களின் அடிப்படையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.*

• இருட்டு

www.padippakam.com

## சட்டங்கள், ஆணையங்கள், நடுவர்மன்றங்கள், திட்டங்கள்...

# அரசு தோட்டத்தில் விளைந்து கிடக்கும் ஏட்டுச் சுரைக்காய்கள்

**இந்தியாவின் மத்திய, மாநில ஆட்சியாளர்கள் அடுக்கடுக்கான பல சமூக நீதிச்சலுகைகளும், சமூக நலத் திட்டங்களும், மக்கள் உரிமைச் சட்டங்களும் கொண்டு வந்து நிறைவேற்றுவதாகக் கூறிக் கொள்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் எதனால் கொண்டு வரப்படுகின்றன, இவை எந்த அளவு நிறைவேற்றப்படுகின்றன, இவற்றால் என்னென்ன பயன்கள் விளைந்திருக்கின்றன என்று அலசும் தொடரின் ஏழாம் பகுதி.**

அரசியல், சமுதாயப் புரட்சியின்றி தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் சமூகப் பொருளாதார முன்னேற்றமும் சமத்துவமும் அடையவே முடியாது. மத்திய-மாநில அரசுகள் கொண்டு வந்திருக்கும் பல்வேறு சட்ட திட்டங்கள், இடஒதுக்கீடு போன்ற சலுகைகள் ஏற்படுத்தியுள்ள விளைவுகள் - தோல்விகளே இந்த உண்மையைப் பறைசாட்டுகின்றன. இந்த உண்மையை அரசே அங்கீகரிக்கும் வகையில் கொண்டு வரப்பட்டதுதான் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் (பி.சி.ஆர்.) என்று பிரபலமாக அறியப்படும் தாழ்த்தப்பட்ட சாதியினர் - பழங்குடியினர் (கொடுமைகள் தடுப்புச்) சட்டம், 1989.

இதற்கு முந்தைய பல்வேறு சட்டங்கள், தாழ்த்தப்பட்ட-பழங்குடி மக்கள் மீதான கிரிமினல்-வன்கொடுமைக் குற்றங்களைத் தடுப்பதில்-குறைப்பதில் தோல்வி கண்டுவிட்டதால், இன்னும் கறாரான-தீவிரமான சட்டபூர்வ தண்டனை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கென்று சொல்விக் கொண்டு வரப்பட்டதுதான் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம். ஆனால், இச்சட்டம் நிறைவேற்றப்பட்டு, அமலாக்கப்பட்ட பிறகாவது தாழ்த்தப்பட்ட-பழங்குடி சாதி மக்களுக்கு எதிரான வன்கொடுமைக் குற்றங்கள் அடியோடு நின்றுவிடவில்லை என்றாலும் குறைந்தாவது இருக்கிறதா?

இல்லை. அதற்கு மாறாக— சொல்லப்பட்ட நோக்கத்திற்கு மாறாக, இம்மக்களுக்கு எதிரான வன்கொடுமை குற்றங்கள் மேலும் மேலும் அதிகரித்த வண்ணம்தான் இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு எதிராக ஒவ்வொரு இருபது நிமிடத்திற்கு ஒரு குற்றம் வீதம் இழைக்கப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசியக் குற்றப் பதிவேடுகளின் 2005-ஆம் ஆண்டு அறிக்கை கூறுகிறது. கடந்த 2006-ஆம் ஆண்டில் மட்டும் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு எதிராக 26,127 தாக்குதல் குற்றங்கள் நடந்துள்ளன. 2004-ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு எதிராக 26,887 குற்றங்கள் நடந்திருப்பதாக வழக்குகள் பதிவாகியுள்ளன.

கர்நாடகா மாநிலத்தில் கம்பாலபள்ளி கிராமத்தில் மேல்சாதி வெறியர்கள் நடத்திய படுகொலையில், தனது குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரைப் பறிகொடுத்து விட்ட தாழ்த்தப்பட்ட முதியவர் வெங்கடராயப்பா.



1,172 தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு எதிராக பாலியல் வன்முறை குற்றங்கள் நடந்ததாகவும், 669 தாழ்த்தப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டதாகவும், 238 பேர் கடத்தி அடைக்கப்பட்டதாகவும், 3,847 தாழ்த்தப்பட்டவர்கள் காயப்படுத்தப்பட்டதாகவும் வழக்குகள் பதிவாகியுள்ளன. இவற்றில் 291 வழக்குகள் சிவில் உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் 8,497 வழக்குகள் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த விவரங்களோடு மிக முக்கியமான ஒரு உண்மை என்னவென்றால், இவையெல்லாம் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்தாம், இதைத்தவிர பதிவு செய்ய முன்வராமலும், பதிவு செய்ய மறுத்தும் விடுபட்டுப் போனவை இன்னும் பல மடங்கு உள்ளன. பதிவு செய்யப்பட்ட வழக்குகளிலும் விசாரித்து, தண்டனை வழங்கப்பட்டவை மிகமிகக் குறைவானவையே. மொத்த வழக்குகளில் 94.1 சதவீதமானவற்றில் குற்றப் பத்திரிகைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றில் 29.8 சதவீதமானவற்றிலேயே தண்டனை வழங்கப்பட்டன. அதாவது 2005-ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான குற்றங்கள் புரிந்ததாக மொத்தம் 57,804 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களில் 46,936 பேர் மீது குற்றப் பத்திரிகைகள் பதிவு செய்யப்பட்டு, விசாரணைகள் முழுமையடைந்து 12,691 பேர் சம்பந்தப்பட்ட வழக்குகளில் மட்டுமே தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு தேசியக் குற்றப் பதிவுத் தலைமையக அறிக்கை கூறுகிறது.

தாழ்த்தப்பட்ட-பழங்குடி மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கிரிமினல் குற்றங்கள் அக்கிரமங்கள் என்பவை பல்வேறு விதமானவை, எண்ணிலடங்காதவை, பல சமயம் எண்ணிப் பார்க்கவும் முடியாத அளவு கொடூரமானவை- வக்கிரங்கள் நிறைந்

தவை. அவை அசிங்கமான - ஆபாச சொற்களால் திட்டுவதில் தொடங்கி தாழ்த்தப்பட்ட பெண்களை கும்பலமாக பாலியல் வன்முறை செய்வது வரை நீள்கின்றன; மனித மலத்னதத் தின்ன வைப்பது, சிறுநீரைக் குடிக்க வைப்பது; உடலுறுப்புகளை வெட்டிச் சிதைப்பது; தாழ்த்தப்பட்ட பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலம் நடத்துவது; பொது இடத்தில் மேல்சாதியினர் பாலியல் வன்முறை செய்வது; அப்பெண்களின் சொந்த சகோதரர்களையும் மகன்களையும் கட்டாயப்படுத்தி உடலுறவு கொள்ளச் செய்வது - இவை போன்ற தாழ்த்தப்பட்டோரை உயிரோடு கொளுத்திக் கொல்வதை விடக் கொடூரமான சித்திரவதைகள் தாழ்த்தப்பட்ட-பழங்குடிச் சாதிகள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்றன.



அரியானா மாநிலத்தில் உள்ள சால்வான் கிராமத்தில் ராஜபுத்திர மேல்சாதி வெறியர்களால் அடித்து நொறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோரின் உடமைகள்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிரான வன்கொடுமைகளே கிடையாது, வெறும் சமூகப் பழக்கவழக்கங்கள் தாம் என்று சொல்லிக் கொண்டு மேல் சாதியினர் கடைப்பிடிக்கும் தீண்டாமைக் கொடுமைகள் ஏராளமாக உள்ளன. குடிநீர், சாலைகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள்-கடைகள், கோவில்கள், பூங்காக்கள்-விளையாட்டு மைதானங்கள், இடுகாடுகள் போன்ற பொது இடவசதிகளைப் பயன்படுத்துவதற்கான குடியுரிமைகள் மறுக்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட ஒருவர் மேல்துண்டு போட்டுக் கொள்வது, செருப்பு அணிந்து செல்வது, ஏன் நல்ல புது ஆடை அணிவது கூட அவர் மீது சாதீயத் தாக்குதலுக்குக் காரணமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட ஒரு இளைஞன் சாதி இந்துப் பெண்ணைக் காதலிப்பது, ஒரு பள்ளி விளையாட்டுப் போட்டியில் தாழ்த்தப்பட்ட சாதி இளைஞர்கள் வெற்றி பெறுவது, தாழ்த்தப்பட்ட ஒரு பேருந்து ஓட்டுநர் சாதி இந்து விரும்பும் இடத்தில் பேருந்தை நிறுத்தாமல் போவது, சாதி இந்துவின் முன்னிலையில் பேருந்தில் உட்கார்ந்து பயணம் செய்வது, சாதி இந்துவின் சாவுச் செய்தி சொல்லவும், பறையடிப்பது உட்பட சாவு வேலைகளைச் செய்ய மறுப்பதும் கூட குற்றமாக அறிவித்து தாக்கப்படுகிறார்கள்.

இவைதவிர தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் 15 குற்றங்கள் பட்டியலிடப்பட்டு அவை வன்கொடுமைகள் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. கொலை, பாலியல் வன்முறை உட்பட நேரடி இந்தியத் தண்டனைச் சட்டங்களுக்குள் வராதவை, மறைமுகமானவை கூட வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் வருகின்றன.

1. உண்ணத் தகாத பொருளையோ, அருவருப்பான ஒன்றையோ குடிக்குமாறு அல்லது தின்னுமாறு தாழ்த்தப்பட்ட-பழங்குடியைச் சேர்ந்த ஒருவரைக் கட்டாயம் செய்வது;

2. அவரது வீட்டு வாசலிலோ, அண்டைப்புறத்திலோ மலசலம், கழிவுப் பொருள், விலங்குப் பிணங்கள் அல்லது வேறு அருவருப்பான பொருளைப் போட்டு அவருக்கு வேண்டுமென்றே தீங்கோ, அவமதிப்போ, எரிச்சலோ ஏற்படுத்துவது;

3. அவரது ஆடைகளை பல வந்தமாய் அவிழ்ப்பது அல்லது அவரை நிர்வாணப்படுத்தியோ, கரும்புள்ளி செம்புள்ளி குத்தியோ ஊர்வலம் விடுவது, மனித கண்ணியத்திற்கு இழுக்கான முறையில் இது போன்று வேறு ஏதேனும் செய்வது;

4: அவருக்குச் சொந்தமான நிலத்தையோ, அவருக்கு ஒதுக்கப்படும் தகுதி வாய்ந்த ஏதேனும் ஓர் அதிகார அமைப்பால் அறிவிப்புச் செய்யப்பட்ட நிலத்தையோ அடாவடித்தனமாய் கைப்பற்றுவது, அந்நிலத்தில் சாகுபடி செய்வது அல்லது அவருக்கு ஒதுக்கிய நிலத்தை வேறொருவருக்கு மாற்றம் செய்வது;

5. தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து அவரது நிலத்தையோ, வீடு வாசலையோ அடாவடித்தனமாய் பறிப்பது, அல்லது நிலம், வீடு, வாசல், நீர் இவற்றில் அவர் தமக்குள்ள உரிமைகளை அனுபவிப்பதில் குறுக்கிடுவது;

6. தாழ்த்தப்பட்ட சாதி அல்லது பழங்குடியைச் சேர்ந்த ஒருவரைக் கட்டாயப்படுத்தியோ அல்லது மயக்கியோ 'போகர்' எனப்படும் ஊதியமற்ற வேலையில் அல்லது பொது நோக்கங்களுக்காக அரசு விதிக்கும் கட்டாயச்சேவை அல்லாத - இதேபோன்ற வேறு வகைக் கட்டாய உழைப்பு அல்லது கொத்தடிமை உழைப்பில் ஈடுபடுத்துவது;

7. வாக்களிக்காதிருக்கும் படியோ, குறிப்பிட்ட வேட்பாளருக்கே வாக்களிக்கும்படியோ, சட்டம் வகை செய்திராத முறையில் வாக்களிக்கும்படியோ தாழ்த்தப்பட்ட-பழங்குடிச் சாதியைச் சேர்ந்த ஒருவரை கட்டாயப்படுத்துவது அல்லது மிரட்டுவது;

8. அச்சாதிகளைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராகப் பொய்யான கெடு நோக்கான அல்லது தொந்திரவு தரும்

www.padippakam.com

படியான உரிமையியல் வழக்கோ, குற்றவியல் வழக்கோ, வேறுவிதமான சட்டநடவடிக்கையோ தொடுப்பது;

9. அரசு ஊழியருக்குப் பொய்யான அல்லது அற்பமான-விளையாட்டுத் தனமான தகவல் கொடுத்து, அதனால் அந்த அரசு ஊழியர் தமது சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட சாதி அல்லது பழங்குடியினர் ஒருவருக்கு தீங்கோ, எரிச்சலோ உண்டாகும்படி செய்வதற்கு காரணமாக அமைவது;

10. பொதுமக்கள் முன்னிலையில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியைச் சேர்ந்த ஒருவரை வேண்டுமென்றே அவமதிப்பது அல்லது கேவலப்படுத்தும் நோக்கத்தோடு மிரட்டுவது;

11. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியைச் சேர்ந்த ஒரு பெண்ணை அவமதிக்கும் பொருட்டோ, மானபங்கம் செய்யும் பொருட்டோ தாக்குவது;

12. தாழ்த்தப்பட்ட சாதி அல்லது பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் தனது ஆளுகையில் வைத்திருக்கும்போது அவளைத் தமது பாலியல் விருப்பத்துக்குப் பணிய வைத்திட அந்த நிலையைப் பயன்படுத்துவது.

13. அம்மக்கள் வழக்கமாகப் பயன்படுத்தும் ஊற்று அல்லது நீர்நிலையை உரிய காரியத்துக்கு தகுதியற்றதாக்கும் நோக்கத்துடன் கேடு விளைவிப்பது அல்லது அசுத்தப்படுத்துவது.

14. அம்மக்களின் பொதுப் பயன்பாட்டுக்குரிய ஓர் இடத்துக்குச் செல்வதற்குள்ள வழக்கமான உரிமையை மறுப்பது அல்லது மற்ற சாதி-சமூகத்தினரும் பயன்படுத்தும் ஓர் பொது இடத்தை தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களும் பயன்படுத்தும் உரிமையை மறுப்பது.

15. அம்மக்களைச் சேர்ந்த ஒருவரைத் தமது வீடு, ஊர் அல்லது வேறு வகை வசிப்பிடத்தை விட்டு வெளியேறும்படி நிர்பந்திப்பது அல்லது அப்படி வெளியேற்றுவது

— ஆகிய பதினைந்து வகை செய்கைகளையும் வன்கொடுமைகள் என்று வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989 வரையறுத்துள்ளது. அச்சட்டத்தின்படி இவ்விதமான வன்கொடுமைகள் புரிபவர்கள் வழக்கமான இந்தியத் தண்டனைச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படுவதோடு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஆறுமாதத்துக்குக் குறையாத, ஐந்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.

தாழ்த்தப்பட்ட-பழங்குடி இனமக்களுக்கு இழைக்கப்படும் சாதீய - சமூகக் கொடுமைகளை-அக்கிரமங்களை நுட்பமாகவும் அனுபவபூர்வமாகவும் உணர்ந்து தொகுத்து, வரையறுக்கப்பட்டதைப் போன்று இச்சட்டம் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.

இவைதவிர, தாழ்த்தப்பட்ட-பழங்குடியின மக்களின் உயிருக்கும், உடைமைக்கும், வாழ்வுக்கும் தீங்கு விளைவிக்கும் நோக்கில் செயல்படுவது, பொய்வழக்கு-பொய்சாட்சி மூலம் அவர்கள் தண்டனை பெறும்படி செய்வது போன்றவை வன்கொடுமைகளாகக் கருதி தண்டிக்கப்படுவது, குற்றவாளிகளின் உடைமைகளைப் பறிமுதல் செய்வது, குற்றவாளிகளை ''நாடு'' கடத்துவது, நடமாட்டத்துக்குத் தடைவிதிப்பது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்கள் வழங்குவது போன்றவையும் நுட்பமாக ஆய்வு செய்து இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை எவ்வாறு அமலாக்குவது; அதை அமலாக்குவதில் ஏற்படும் தவறுகளுக்குக் கூட தண்டனை என்ற ரீதியில் விவரிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தை அமலாக்குவதற்கான அதிகார அமைப்புகள், அதற்கென தனி-சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பது என்று கூடுதலான அக்கறையும் செலுத்தப்பட்டிருக்கிறது.

இச்சட்டம் நிறைவேற்றப்பட்டு 18 ஆண்டுகளாகிறது. ஆனால், இந்த வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் எந்த அளவு அமலாக்கப்பட்டிருக்கிறது? அது ஏற்படுத்தியுள்ள விளைவுகள் என்ன? — என்று தொகுத்துப் பார்க்கும்போது ஏமாற்றமே மிஞ்சுகிறது!

- தொடரும்

# ரிலையன்ஸ் ஃபிரஷ் முற்றுகை – போராட்ட இயக்கம் தொடங்கியது

**த**னியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனப்படும் மறுகாலனியாக்கத்துக்கு எதிராக தொடர்ந்து உறுதியாகப் போராடிவரும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள், சிறு வணிகத்தை விழுங்க வந்துள்ள ரிலையன்ஸ் - வால்மார்ட்டுக்கு எதிராக ''சிறு வணிகம், சிறு தொழில்கள் உயர்த்திப் பிடி! சூறையாடும் ரிலையன்ஸை துரத்தியடி!'' என்ற மைய முழக்கத்துடன், மே நாளன்று ரிலையன்ஸ் ஃபிரஷ் கடைகளை முற்றுகையிடும் போராட்டத்தை அறிவித்து, தமிழகமெங்கும் வீச்சாக பிரச்சாரம் செய்து வருகின்றன.

தற்போது சென்னையில் 24 இடங்களில் ரிலையன்ஸ் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்தின் எல்லா நகரங்களிலும் கடைகளைத் திறப்பது என்ற வெறியோடு ரிலையன்ஸ் செயல்பட்டு வருகிறது. வால்மார்ட், திரிநேத்ரா போன்ற நிறுவனங்களும் அடுத்தடுத்துக் களத்தில் இறங்க உள்ளன. பன்னாட்டு, ஏகபோக மூலதனத்தின் இந்தத் தாக்குதல் காய்கறி, மளிகை மற்றும் இறைச்சி வியாபாரிகளுடன் நிற்கப் போவதில்லை. எலக்ட்ரிகல், எலக்ட்ரானிக் பொருட்கள், ஹார்டுவேர் கடைகள், துணிக்கடைகள், பிற நுகர்பொருட்கள் என அடுக்கடுக்காக அனைத்துத் துறைகளிலும் நுழைய விருப்பதாக பன்னாட்டு நிறுவனங்களும், இந்தியத் தரகு முதலாளிகளும் அறிவித்துள்ளன.

எதிரிகளின் தாக்குதல் இப்படித் தீவிரமடைந்து வரும் நிலையில் ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் கள்ளத்தனமாக மவுனம் சாதிக்கின்றன. இருப்பினும், தரைக்கடை வியாபாரிகள், தள்ளுவண்டி வியாபாரிகள், காய்கறி அங்காடிகளின் சிறு வணிகர்கள் முதலானோர் மட்டுமின்றி, எல்லா பிரிவு மக்கள் மத்தியிலும் இப்பிரச்சாரம் உற்சாகமான ஆதரவைப் பெற்று வருகிறது. இவ்வமைப்புகள் வெளியிட்டுள்ள ''சிறு வணிகத்தை விழுங்க வரும் ரிலையன்ஸ், வால்மார்ட்டே வெளியேறு!'' என்ற சிறு வெளியீடு வணிகர்கள் மத்தியிலும், பரவலான மக்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. பலர் வெளியீடுகளை விற்பனைக்காகக் கோரிப் பெற்று வருகின்றனர். அச்சிட்டுத் தருவதற்கும் முன் வந்திருக்கிறார்கள். இது புரட்சிகர அரசியலுக்குக் கிடைத்த வெற்றி.

நெல்லையில் இவ்வமைப்புகள் நடத்திய கோக் எதிர்ப்புப் போராட்டம் போலவே ரிலையன்ஸ் எதிர்ப்புப் போராட்டமும் ஒரு முத்திரையைப் பதிக்கும் போராட்டமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஓங்கட்டும் போராட்டம்!

*- பு.ஜ. செய்தியாளர்கள்.*


படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



சென்னை - பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டி தொழிற்சாலையை "கார்ப்பரேஷன்" ஆக்க முயலுவதையும், ரயில் நிலைய பராமரிப்பு பணிகளைத் தனியாரிடம் ஒப்படைப்பதையும் எதிர்த்து நடந்த ரயில்வே தொழில்நுட்ப கண்காணிப்பாளர்களின் ஆர்ப்பாட்டம்.

வழிப்பறி செய்கிறது இரயில்வே துறை.

தொடர்ந்து ஈராண்டுகளாக பயணிகள் கட்டணம் உயர்த்தப்படவே இல்லை என்று கூசாமல் புளுகிக் கொண்டு புதிய உத்திகளுடன் வழிப்பறி செய்து வரும் லாலு, ஆட்குறைப்பு நடவடிக்கை மூலம் இலட்சக்கணக்கான தொழிலாளர்களை வீதியில் வீசியெறிந்து விட்டு, செலவுகள் குறைந்து ஆதாயம் பெருகியுள்ளதாகக் கணக்கு காட்டுகிறார். இரயில்வே துறையால் நியமிக்கப்பட்ட பிரகாஷ் டாண்டன் கமிட்டி, ராகேஷ்மோகன் கமிட்டி ஆகியவை பரிந்துரைத்த தொழிலாளர் விரோத, தனியார்மய நடவடிக்கைகளே இப்போது தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

கடைநிலை ஊழியர்களான "கலாசி" தொழிலாளர்களில் ஏறத்தாழ இரண்டு லட்சம் பேர் ஆட்குறைப்பு செய்யப்பட்டு வேலையிலிருந்து பிடுங்கி எறியப்பட்டுள்ளனர். தண்டவாளங்களில் விரிசலைக் கண்டறிந்து பழுது நீக்குதல், தண்டவாளத்தின் கீழுள்ள ஜல்லி இறுகி விடாமல் சீரமைத்தல் - பராமரித்தல், ரயில் பெட்டிகளைத் துப்புரவு செய்தல், ரயில் நிலையங்களைப் பராமரித்தல், ரயில்வே குடியிருப்புகள், உணவகம், முன்பதிவு சேவை, ஆளற்ற லெவல் கிராசிங்குகள், பாலங்களைக் கண்காணித்தல் முதலான இரயில்வே துறையே முன்னர் செய்துவந்த பணிகள் அனைத்தும் தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் தாரை வார்க்கப்பட்டுள்ளன. பணிமனைகளில் 15 சதவீதமும் தற்காலிக ஊழியர்களில் 100 சதவீதமும் ஏற்கெனவே ஆட்குறைப்பு செய்யப்பட்டு விட்டனர். அதிவேக ரயில்கள் சிறிய ஊர்களில் நிற்காது என்று காரணம் காட்டி, பல ரயில் நிலையங்களில் பார்சல் அனுப்பும் பிரிவு ரத்து செய்யப்பட்டுள்ளது. பெரிய ரயில் நிலையங்களில் ஆட்குறைப்பு காரணமாக ஊழியர்கள் மீது கூடுதல் வேலைப்பளு சுமத்தப்பட்டுள்ளது. இத்தகைய ஆட்குறைப்பு நடவடிக்கைகளே இரயில்வே துறையின் இலாபத்துக்கு முக்கிய காரணமாகும்.

இதுதவிர, "ஈ டிக்கெட்டிங்" முறை மூலம் பெட்ரோல் பங்குகள், வங்கிகள் வாயிலாக பயணச் சீட்டு விற்பனையைக் கொண்டுவந்து, ஆட்குறைப்புக்கும் அதன்மூலம் அதிகலாபத்துக்கும் திட்டம் தீட்டி வருகிறார் லாலு. ஏற்கெனவே தனியாருடன் சேர்ந்து 225 ரயில் நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தப் போவதாக அறிவித்துள்ளார் லாலு. இந்திய ரயில்வேக்குச் சொந்தமாக நாடெங்குமுள்ள 10,000 ஏக்கர் உபரி நிலங்களைத் தனியாருக்கு விற்று ஏறத்தாழ ஒரு லட்சம் கோடி ரூபாய் திரட்டவும், ரயில்வே கட்டிடங்களில் தனியாருடன் இணைந்து தங்கும் விடுதிகள், பேரங்காடிகள், திரையரங்குகளை நிறுவவும் திட்டங்கள் தயாராக உள்ளன. வருவாய் அதிகம் கிடைத்துவரும் முக்கியமான சரக்கு ரயில் நிலையங்களையும் பயணிகள் ரயில் நிலையங்களையும் தனியாருக்குக் குத்தகைக்கு விடும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களான பம்பார்டியர், ஜெனரல் எலக்டிரிகல்ஸ் ஆகியன இதற்குப் பேரங்களை நடத்தி வருகின்றன. ஏற்கெனவே பயணிகள் பெட்டிகளையும் சரக்கு ரயில் பெட்டிகளையும் 15 தனியார் நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு விட்டு அதன் மூலம் ரூ. 500 கோடி அளவுக்கு இரயில்வே துறை ஆதாயம் ஈட்டியுள்ளதால், இதை மேலும் விரிவுபடுத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இத்தகைய தொழிலாளர் விரோத-தனியார்மய நடவடிக்கைகளால் விரைவில் 3 லட்சம் ஊழியர்கள் தேவைக்கு அதிகமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டு, வேலையிலிருந்து விரட்டப்படும் அபாயத்தில் உள்ளனர்.

விளம்பரங்கள் மூலம் கணிசமான வருவாய் கிடைக்கும் என்பதால், ரயில் நிலையங்களிலும் ரயில் பெட்டிகளிலும் விளம்பரங்களை அனுமதித்து வந்தது போய், இப்போது ஒரு ரயிலையே விளம்பரத்துக்காக பெயரிட்டு இயக்குமளவுக்கு தனியார்மயத்தில் மூழ்கி முத்தெடுக்கிறார், லாலு. கொலைகார கோக்கின் பங்காளி நிறுவனமான பெப்சி குளிர்பான கம்பெனியின் "குர்குரே" எனும் நொறுக்குத் தீனியை விளம்பரப்படுத்துவதற்காகவே "குர்குரே எக்ஸ்பிரஸ்" இயக்கப்படுகிறது. உணவு மற்றும் பிற சேவைகளைத் தனியாரிடம் குத்தகைக்கு விட்டதன் மூலம், உபரியாக உள்ள ஊழியர்கள் குறைக்கப்பட்டு ஏறத்தாழ ரூ. 1000 கோடி அளவுக்குச் செலவுகள் குறைந்துள்ளதாகப் பெருமைப்படும் லாலு, இத்திட்டத்தை நாடெங்கும் விரிவுபடுத்தப் போவதாக அறிவித்துள்ளார்.

சமூகநீதி, இடஒதுக்கீடு பேசும் பிற்பட்டோர் நலச் சங்கங்களில் பூஜிக்கப்படும் லாலுவால், ஆட்குறைப்பு செய்யப்பட்டவர்கள் அனைவருமே பிற்பட்ட-தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த ஊழியர்களாவர். கடைநிலை ஊழியர்களான இவர்களின் வயிற்றிலடித்துதான், இலாபக் கணக்கு காட்டுகிறார் லாலு. பால்கோ போன்ற அரசுத்துறை நிறுவனங்களை நேரடியாகத் தனியாருக்குத் தாரை வார்த்தது போல் அல்லாமல், படிப்படியாக இரயில்வே துறையைத் தனியார்மயமாக்கும் புதிய உத்தி; ஒட்டு மொத்தமாக அல்லாமல் கொஞ்சம் கொஞ்சமாகத் தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்து வீதியில் வீசியெறியும் நரித்தனம்; விரைவுப் பேருந்து, சொகுசுப் பேருந்து, தாழ்தளப் பேருந்து, உள்வட்டப் பேருந்து என்றெல்லாம் பெயரிட்டு கட்டணக் கொள்ளையை நடத்தும் தி.மு.க. அரசை விஞ்சும் சட்டபூர்வ வழிப்பறி - இவைதான் இரயில்வே அமைச்சர் லாலுவின் நிர்வாகத் திறன்!

இதனால் தான் மூன்றாண்டுகளுக்கு முன்பு வரை "கோமாளி, ஊழல் பெருச்சாளி, கிரிமினல் அரசியல்வாதி, மாட்டுக்கார வேலன்" என்றெல்லாம் நக்கலடித்து சாடி வந்த பார்ப்பன - பனியா பத்திரிகைகளும் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளும் இன்று அவரை "டாப் டென்" அமைச்சர்கள் பட்டியலில் வைத்துக் கொண்டாடுகின்றனர்.

● கவி

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08



கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்ட அட்டையை மட்டும் கொடுத்துவிட்டு, வேலை கொடுக்காமல் ஏமாற்றும் அரசின் மோசடியை அம்பலப்படுத்தும் காஜிபுர் கிராம மக்கள்.

## உத்திரப்பிரதேசம்:

# தேர்தல் புழுதியில் மறைக்கப்படும் பட்டினிச் சாவுகள்

**உ.**பி. மாநிலம் வாரணாசி மாவட்டத்திலுள்ள பேல்வா கிராமத்தைச் சேர்ந்த இலட்சுமிணாவிடம் அடமானம் வைப்பதற்குத் தனது திருமணப் புடவையைத் தவிர, மதிப்புமிக்க பொருட்கள் வேறெதுவும் இல்லை. அந்தச் சேலையை யாராவது அடமானம் எடுத்துக் கொண்டு நூறு [illegible] காப்பாற்றி விடலாம் என நம்பினார், அவர். ஆனால், சேலையை அடகு வைப்பதற்கு முன்பே, சாவு முந்திக் கொண்டு விட்டது. ஒன்பது வயதான சீமா என்ற அந்தச் சிறுமியின் உயிரைக் குடித்த நோயின் பெயர் ''பட்டினி''!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சோனேபத்ரா மாவட்டத்திலுள்ள ராப் கிராமத்தைச் சேர்ந்த 18 காசியா பழங்குடி இனக் குழந்தைகள் பட்டினியால் நோய்வாய்ப்பட்டு இறந்து போயின. கடந்த ஆண்டு மே மாதம் தொடங்கி செப்டம்பருக்குள் பேல்வா கிராமத்தில் மட்டும் ஐந்து குழந்தைகள் பட்டினிக்குப் பலியாகியுள்ளன. கிழக்கு உ.பி. பகுதியில் கடந்த இரண்டே ஆண்டுகளில் 174 பேர் பட்டினிக்குப் பலியாகியிருப்பதாக மனித உரிமைகளுக்கான மக்கள் கண்காணிப்புக் குழு குறிப்பிடுகிறது.

கிழக்கு உ.பி. பகுதியில் அடிக்கடி ஏற்படும் வறட்சியால் விவசாயம் நசிந்து விட்டது. சந்தையின் ஏற்ற இறக்கங்களைத் தாக்குப் பிடிக்க முடியாமல், பாரம்பரியமிக்க நெசவுத் தொழில் நொடித்துப் போய் விட்டது. நிரந்தரமான மாற்று வேலை வாய்ப்பு எதுவும் கிடைக்காததால், இப்பகுதி மக்கள் பட்டினியோடு போராடி வருகின்றனர்.

பல நாட்கள் பட்டினி; சில வேளைகளில் அரிசிச் சோறும், வேகவைத்த உருளைக்கிழங்கு மட்டுமே உணவு. இதன் காரணமாக புரோட்டீன் சத்துக் குறைவு ஏற்பட்டு, என்ன ஏது வென்று கண்டுபிடிப்பதற்கு முன்பே குழந்தைகள் இறந்துவிடுவதாக குழந்தை நல மருத்துவர் ராஜேந்திர பதக் குறிப்பிடுகிறார். விவசாயக் கூலி வேலையை நம்பி வாழ்ந்து வரும் தாழ்த்தப்பட்டோரும், நெசவுத் தொழிலை நம்பியுள்ள முசுலீம்களும் தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உ.பி. மாநில சட்டசபையைக் கைப்பற்றுவதற்காக சாதிக் கூட்டணிக் கணக்கில் மூழ்கிப் போய்விட்ட ஓட்டுக் கட்சிகளுக்கு, இந்தப் பட்டினிக் கணக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. ''உணவுப் பொருள் உற்பத்தியில் பற்றாக்குறை இல்லாதபொழுது பட்டினிச் சாவு எப்படி நடக்க முடியும்?'' எனத் திமிராகக் கேட்கிறது அதிகார வர்க்கம். மேலும், பட்டினியோடு போராடும் இம்மக்களை வறுமைக் கோட்டுக்கு மேல் வாழ்வதாகப் பிரித்து, ரேசன் பொருட்கள் கிடைக்காமலும் வயிற்றில் அடித்துவிட்டது. காங்கிரசும், போலி கம்யூனிஸ்டுகளும் பீற்றிக் கொள்ளும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாதத் திட்டம், இந்தப் பகுதியில் நடைபெற்றதற்கான அறிகுறியே தென்படவில்லை.

எத்தியோப்பியா, சூடான், சோமாலியா போன்ற ஏழை ஆப்பிரிக்க நாடுகளோடு போட்டி போடும் அளவிற்கு, இந்தியாவின் பல பகுதிகளில் பட்டினிச் சாவுகள் நடந்து வருகின்றன. தாராளமயத்தை மேலும் தீவிரமாக அமல்படுத்துவதுதான் வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும், பட்டினியையும் ஒழிப்பதற்கான ஒரே வழி என்கிறார், ப.சிதம்பரம்.

தாராளமயத்தைத் தீவிரப்படுத்த வேண்டும் என்றால், கடந்த பதினைந்து ஆண்டுகளாக தாராளமயம நத்தை வேகத்தில்தான் நகர்ந்து வருகிறதா? தாராளமயம் 'நத்தை' வேகத்தில் நகரும்பொழுதே, இத்துணை பட்டினிச் சாவுகளையும், தற்கொலைச் சாவுகளையும் ஏற்பத்தியிருக்கிறது என்றால், தீவிரமான தாராளமயம் நாட்டையே சுடுகாடாக்கி விடாதா?

படிப்பகம்